வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු








Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.04.2023 வியாழக்கிழமை | இதழ் : 118 | பக்கங்கள் : 12


# தேர்தலை நடத்தப் பணம் கோரியும் 1 மாதமாக பதிலளிக்காத ஜனாதிபதி

## தேர்தல்கள் ஆணைக்குழு கவலை 10 ஆம் திகதிக்கு முன் கூடி இறுதி முடிவு

கொழும்பு, ஏப். 06

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான பணத்தை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்துக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

நிதி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி ஒரு மாதம் நிறைவடைய வுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள் ளது.

இதனிடையே, தேர் தலுக்கு தேவையான நிதி தொடர்பில் கலந்துரை யாடுவதற்கு உள்ளூ ராட்சி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரிடம் சந்தர்ப்பம் கோரப்பட்ட போதிலும், இதுவரை அதற்கும் எவ்வித சாதக மான பதிலும் கிடைக்க வில்லை என தெரிவிக்கப் பட்டுள்ளது.

11

# இலங்கையை சீர்திருத்த இந்தியா உதவவேண்டும்!

ஜனாதிபதி ரணில் கோரிக்கை



சென்னை, ஏப். 06

இலங்கையில் சீர்திருத் தங்களை மேற்கொள்ள இந்தியா உதவ வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் நல்லாட் சிக்கான தேசிய மையத் தின் தலைவர் பாரத் லால் தலைமையிலான இந்திய தூதுக்குழு அண்மையில் இலங்கை வந்தது. இந்த குழுவினருக்கும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையே நடை பெற்ற சந்திப்பு தொடர் பாக பாரத் லால் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது, இலங்கை தொடர்பான தனது தொலைநோக்குப் பார்வை குறித்தும் தற் போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை

11

# இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்தும் சவால் நிலையில்!

எச்சரிக்கின்றது உலக வங்கி

கொழும்பு, ஏப். 06

இலங்கையின் பொரு ளாதாரம் 2023 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் குறிப்பிடத் தக்க சவால்களை எதிர் கொள்ளும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 7.8 வீத வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டில் 4.3 வீத மாக சுருங்கும் எனவும், கேள்வி தொடர்ந்து குறைந்து வருவதால், வேலை இழப்புகள், வரு மான இழப்புகள் தீவிர மடைந்து, விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக உற்பத்தி மோசமாக பாதிப்ப டையும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

கடன் நிலைத்தன் மையை மீட்டெடுக்க வெளிநாட்டு, சில உள் நாட்டு கடன்களை மறு சீரமைக்கவேண்டும் என் றும் உலக வங்கி வலியு றுத்தியுள்ளது.

ஒரு வலுவான மற்றும் நம்பக மான கட்டமைப்பு

11

# 13 ஐ முழுமையாக அமுலாக்குவதில் உறுதியாக இருக்கிறார் ஜனாதிபதி!

நவீன் திஸாநாயக்க தகவல்

கொழும்பு, ஏப். 06

“அரசியல் ரீதியில் தனக்கு பின்னடைவு ஏற் படும் என்றபோதிலும் அரசி யலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட் டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க உறுதியாக இருக் கின்றார்.” - என்று ஐக் கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் அமைச்சரு மான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அதிகாரப்பகிர்வு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருப்ப



வர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 13

11

# உர விநியோகத்திலிருந்து விலகுகின்றது அரசாங்கம்!

கொழும்பு, ஏப். 06

எதிர்வரும் பெரும் போகத்தில் உர விநியோ கத்தில் இருந்து அரசாங் கம் விலகவுள்ளதாக விவ சாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உர விநியோகம் தனி யார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படவுள் ளது.

இரசாயன உரம், சேதன உரம், விதைகள் மற்றும் விவசாய பொருட்களை கொள்வனவு செய் வதற்காக விவசாயி களுக்கு நிதி நிவாரணம் வழங்கப்படும். இதற்காக, கியூ. ஆர். குறியீட்டு முறைமையை உருவாக்கி, அனைத்து விவசாயிகளுக் கும் அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என் றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

# தமிழ் பாராளுமன்ற அரங்கத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு

சித்தார்த்தன் எம். பி.

யாழ்ப்பாணம், ஏப். 06

தமிழ் பாராளுமன்ற அரங்கம் முயற்சியில் தமது பங்களிப்பு இருக் கும் என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பங் காளிக் கட்சியான புளொட் டின் தலைவரும் எம். பியு மான த. சித்தார்த்தன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மனோ கணேச னுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில், “உங்களு டைய தமிழ் பாராளு மன்ற அரங்க முயற்சிக்கு எமது பங்களிப்பு என்றும் உள்ளது. இந்த முயற்சியை முன்னெடுக்கும்படி கேட் டுக் கொள்கின்றோம்.”, என்று குறிப்பிட் டுள்ளார்.

11

# பெரமுனவை பலவீனப்படுத்த கட்சிக்குள்ளேயே சூழ்ச்சிகள்!

விரைவில் கட்டமைப்பு மாற்றம் என்கிறார் சாகர

கொழும்பு, ஏப். 06

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை பல வீனப்படுத்த கட்சிக்குள் ளேயே சூழ்ச்சிகள் முன் னெடுக்கப்படுகின்றன. கட்சியை மறுசீரமைக்க ஆரம்பகட்ட நடவடிக் கைகளை மேற்கொண் டுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தலைமையில் தொடர்ந்து செயல்படு வோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள் ளார்.

புத்தளத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையில் மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

11

# உள்ளூராட்சி சபைகளை கண்காணிக்க பிரதமர் தலைமையில் குழு நியமனம்!

கொழும்பு, ஏப். 06

உள்ளூராட்சி மன்றங் களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கு பொருத் தமான வேலைத்திட்டங் களை தயாரிப்பதற்காக பிரதமர் தினேஷ் குண வர்த்தன தலைமையில் விசேட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச் சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர் கள், மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு தலைவர் கள், மாகாண தலைமைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் என்போர் உள்ளடங்கு கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங் களின் ஆயுட்காலம் கடந்த மார்ச் 19ஆம் திகதியுடன் நிறைவடைந் தது. இந்நிலையிலேயே அவற்றின் அடுத்த கட்ட செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக ...

11

# போதைப்பொருளுடன் இந்தியர் மூவர் கைது

மன்னார், ஏப். 06

மன்னார் கடலில் 92 கிலோ ஹசீஸ் போதைப் பொருளுடன் இந்திய பிர ஜைகள் மூவர் நேற்று மாலை கைது செய்யப் பட்டனர். அவர்கள் பயணித்த நாட்டுப் படகு ஒன்றும் இலங்கைக் கடற்படையினரால் கைப் பற்றப்பட்டது.

தலைமன்னார்

11

# புதிய பயங்கரவாத சட்டத்தை எதிர்க்க விமல் அணியும் முடிவு

விரைவில் பெரும் போராட்டமாம்

கொழும்பு, ஏப். 06

“அரசின் புதிய பயங்கர வாத எதிர்ப்பு சட்டமூலத் துக்கு எதிராக மாபெரும் கண்டனப் போராட் டத்தை கட்சி பேதமின்றி நாம் அனைவரும் ஒற்று மையுடன் முன்னெடுக்க வேண்டும்.”

- இவ்வாறு உத்தர லங்கா கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், “சர்வதேச நாணய நிதி யத்தில் தஞ்சம டைந்த ஜனாதிபதி

11

## போதைப்பொருள்...

கடற்பரப்பில் 92 கிலோ ஹசிஸ் போதைப்பொருள் ஏற்றியவாறு பிரவேசித்த இந்திய படகே கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்தியப் படகில் பயணித்த 3 இந்தியர்களும் கடற்படையினரால் கைது செய்ப்பட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

## உள்ளூராட்சி...

இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் வெவ்வேறு வேலைத்திட்டங்களை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லல், குறித்த நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடுகளை நிர்வகித்தல் , சகல நடவடிக்கைகளையும் கண்காணித்தல் மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட பல செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகளை இக்குழுவின் ஊடாக செயல்படுத்துவதற்கு கடந்த வாரம் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருத்து வெளியிட்ட பிரதமர் தினேஷ் குணவர்த்தன,

கடந்த 10 மாதங்களில் எதிர்கொண்ட பின்னடைவிலிருந்து நாடு தற்போது சீராகி முன்னேறியுள்ளது. நிதி நெருக்கடி , புதிய நியமனங்களை வழங்குதல் தொடர்பான சுற்று நிரூபம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுற்று நிருபங்கள் மற்றும் நேரடி அறிவிப்புக்கள் மூலம் அனைத்து மாவட்ட குழுக்களினதும் இணை தலைவர்களாக ஆளுநர்களை நியமித்துள்ளார்.

அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஆயுட்காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அன்றாட நடவடிக்கைகளை இக்குழுக்களின் ஊடாக முன்னரைப் போன்றே முன்னெடுத்துச் செல்லப்படும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள் இவற்றைப் பின்பற்ற வேண்டும்.

அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக ஆளுனர்கள் இதில் பங்கேற்பார்கள். மாவட்ட அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இவை தொடர்பில் ஆழமாக அவதானம் செலுத்த வேண்டும். எதிர்காலத்தில் உள்ளூாராட்சி மன்றங்களின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக 24 மணித்தியாலங்களும் செயல்படும் பிரிவு நிறுவப்படும். இது தொடர்பில் அபிவிருத்தி குழுக்களின் தலைவர்களின் அவதானத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அவற்றின் தலைவர்களின் ஆலோசனைக்கமைய செயற்பட வேண்டும்.

அலுவலகத்திற்கு சென்றோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ மக்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் அமைப்பு காணப்பட வேண்டும். உள்ளூாராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் இல்லாவிட்டாலும் இந்த நிறுவனங்களின் மூலம் அன்றாட செயல்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

எதிர்க்கட்சியினரும் மாவட்ட குழுக்களில் பங்குபற்ற முடியும். பிரச்னைக்குரிய விடயங்கள் தொடர்பில் மாவட்ட அதிபர்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும். மாகாண சபைகளின் செயல்பாடுகளும் அபிவிருத்திகளுக்கான நிதி ஒதுக்கீடுகளும் இதன் ஊடாகவே இடம்பெறும் - என்றார். (ஐ)

## இலங்கையை...

மீட்டு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய தூதுக்குழுவிடம் தெளிவுபடுத்தியுள் ளார்.

கொள்கை சீர்த்திருத்தங்கள், டிஜிற்றல் தொழில்நுட்ப பயன்பாடு, திறன் வளர்ப்பு, நல்லாட்சி, துறைசார் வல்லுநர்களை உருவாக்குவதற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல், பொது மக்களுக்கு திட்டமிட்ட கால வரையறைக்குள் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை மையப்படுத்தி ஜனாதிபதியின் கருத்துகள் அமைந்திருந்ததாக இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் தலைவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரங்களில் இந்தியா, இலங்கைக்கு உதவ வேண்டும் என்றும், பொதுக் கொள்கைக்காக இலங்கையில் பல்கலைக்கழகம் அமைக்க உதவ வேண்டும் எனவும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

## பெரமுனவை...

அவர் மேலும் பேசுகையில்,

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்கு தீங்கிழைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எம் மத்தியிலும் விமர்சனங்கள் உள்ளன. கடந்த அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்கள் தற்போது தூய்மையானவர்கள்போல் அரசியல் செய்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் கடுமையான நிபந்தனைகளை கட்டாயம் செயல்படுத்த வேண்டும் என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எமது அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை.

நாணய நிதியத்தை நாடினால் அரசாங்கத்தில் இருந்து விலகுவோம் என்று அரசாங்கத்துக்குள் கடுமையாக எதிர்ப்புக்கள் எழுந்தன. சர்வதேச நாணய நிதியத்தை நாடாமல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய அவதானம் செலுத்தினோம். தேசிய வளங்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார்மயப்படுத்தும் முயற்சிக்கு அரசாங்கத்துக்குள் கடுமையான எதிர்ப்புகள் எழுந்தன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சகல திட்டங்களுக்கும் ஆளும் தரப்பினரே எதிர்ப்பு தெரிவித்தார்கள். பொருளாதார பாதிப்பு தீவிரமடையும் போது ராஜபக்ஷர்களை மாத்திரம் குற்றவாளியாக்கிவிட்டு ஒரு தரப்பினர் அரசாங்கத்தில் இருந்து விலகி தற்போது ஒன்றும் அறியாததை போல் கருத்துரைக்கிறார்கள். நாட்டு மக்கள் இவர்களுக்கு நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தியதை போன்று தற்போது பொதுஜன பெரமுன கட்சியை பலவீனப்படுத்த கட்சிக்குள் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்து சவால்களையும் நிச்சயம் முறியடிப்போம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளோம். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் இதுவரை கட்சி கூட்டத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

கட்சியை மறுசீரமைக்க ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் தொடர்ந்து செயல்படுவோம் - என்றார். (ஐ)

# 83 ஜூலை முதலான சம்பவங்களை கண்டறிய விரைவில் ஆணைக்குழு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்

கொழும்பு, ஏப். 06

உண்மையை கண்டறிய நியமிக்கப்பட இருக்கும் ஆணைக்குழு மூலம் 1983 ஜூலை மாதத்தில் இருந்து இந்த நாட்டில் இடம்பெற்ற சம்பவங்களை தேடிப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். அத்துடன் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் ஊழல் இல்லாத நாட்டை உருவாக்க முடியாது என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ் தெரிவித்தார்.

ஊழலுக்கு எதிராக நிலைபேரான வழியில் பயனிக்க இலங்கையால் முடியுமா? மும்மொழியப்பட்டுள்ள சட்டமூலம் இதற்கு உறுதுணையாக அமையுமா எனும் தலைப்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் இலங்கை மன்ற கல்லூரியில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்திருந்த மக்கள் மன்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றம், நீதிமன்றம் மற்றும் நிறைவேற்றுத்துறை என இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஊழலை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பு இல்லாமல ஊழல் இல்லாத நாட்டை உருவாக்க முடியாது. அரசமைப்பின் 21ஆம் திருத்தம் அதேபோன்று புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் நாட்டின் எதிர்கால திசையை தீர்மானிக்கும் புதிய சட்டமாக அறிமுகப்படுத்தலாம்.

அத்துடன், புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஊடாக தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள முடியுமாகிறது.

சட்ட ஆலாலோனை மற்றும் சட்ட உதவி பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான அதிகாரம் சட்டமா அதிபருக்கு வழங்கி இருக்கிறது. தற்போது செயல்படும் இலஞ்ச ஆணைக்குழு ஆணையாளர்ஷகளாக நியமிக்கப்படுவது ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளாகும்.

அந்த முறையை மாற்றி செயற்திறமையுடன் பொறுப்புக்கூறக்கூடிய இலஞ்ச ஆணைக்குழு சபை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ஐ)

## தேர்தலை...

பிரதமருடனான கலந்துரையாடலை நடத்துவதற்கு இனியும் எதிர்பார்க்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் புதுவருடத்திற்கு முன்னர் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழு கூடி இது தொடர்பில் தீர்மானம் மேற் கொள்ளும் என தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

## இலங்கையின்...

சீர்திருத்தத் திட்டம், நீண்டகால நெருக்கடியைத் தவிர்க்கவும் தற்போதைய பொருளாதார சிக்கல்களின் மூல காரணங்களை நிவர்த்தி செய்யவும் முக்கியமானது என்று அது மேலும் கூறியுள்ளது.

பல கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் நெருக்கடியைச் சமாளிக்க அரசியல் தலைமை மற்றும் இலங்கை குடிமக்களின் உறுதியான தீர்மானம் தேவை என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பின் அர்த்தமுள்ள விளைவுகளும் சீர்திருத்த வேகத்தைத் தக்கவைக்கவும், விரைவான மற்றும் வலுவான பொருளாதார மீட்சிக்கான பாதையை பட்டியலிடவும் சர்வதேச பங்காளிகளின் கூட்டு ஆதரவும் தேவைப்படும் என்று அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் வறுமையைக் குறைக்க சிறந்த இலக்குடன் கூடிய சமூக உதவியும் உற்பத்தித் துறைகளின் மீட்சியும் வருமான அதிகரிப்பும் தேவைப்படும் என்று உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நெருக்கடியை இலங்கை வலுவானதும் நெகிழ்ச்சியானதுமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை வலிமையானதும் மிகவும் நெகிழ்ச்சியானதுமான பொருளாதாரத்தை நோக்கி பயணிக்கும் நிலையில், ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பாதுகாக்க உயர் வருமானம் பெறும் குழுக்கள் அதிக சுமைகளை தாங்கிக்கொள்ள நேரிடும் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## தமிழ்...

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரங்கத்தை அமைப்பது குறித்து அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் மனோ கணேசன் அண்மையில், பகிரங்க அழைப்பு விடுத்ததுடன் தனிப்பட்ட ரீதியில் கடிதங்களையும் அனுப்பி வைத்திருந்தார். இதற்கே தற்போது சித்தார்த்தன் பதிலளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 13 ஐ...

இதனால் சிறுபான்யின மக்களை பிரதிநிதித் துவப்படுத்தும் கட்சி களின் நிலைப்பாடுகளும் மாறிவருகின்றன.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழு மையாக அமு லாக்க அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். இந்த விடயம் தனது அரசியல் செல்வாக்குக்கு சவாலாக அமையும் என்ற போதிலும் சரியான முடிவை எடுப்பதில் அவர் பின்வாங்காமல் உள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தபட வேண்டும். இது அத்தியாவசிய காரணி என ஜனாதிபதி கருதுகின்றார்-என்றார். (அ)

## புதிய...

ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசு, 'இப்போது அரசு வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகுவதே எமது முதல் கட்டளை' எனக் கூறி நாட்டின் அனைத்து பொருளாதார நிலையங்களையும் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளது.

அதற்கு எதிரான பொதுச் செயற்பாடுகளை நசுக்கப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்த அரசு முற்படுகின்றது. இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்கள், தேசிய அமைப்புகள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து பொது நடவடிக்கைகளும் இந்தப் பாரபட்சமான நடவடிக்கைக்கு எதிராக ஒற்றுமையுடன் போராட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்கள், தேசிய அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு நாம் ஒன்றைக் கூறுகின்றோம், இஸ்ரேல் ஜனாதிபதி கொண்டுவந்த அடக்குமுறை சட்டத்துக்கு எதிராக அந்நாட்டு மக்கள் எழுந்து நின்றது போல், இந்தத் தீய நடவடிக்கைக்கு எதிராக நாம் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் நல்லிணக்கத்துடனும் ஒற்றுமையுடனும் மாபெரும் கண்டனப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்." - என்றார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது...!

கிறிஸ்துவுக்கு பின், கிறிஸ்துவுக்கு முன் என்பதுபோல, இப்போது இலங்கை அரசியலில் ஐ. எம். எவ். கடனுக்கு முன் - பின் என்று எழுத வேண்டும் போல இருக்கின்றது.

உளளூராட்சி தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சியினர் அண்மைய நாட்களில் அதிகம் பேசிக் கொள்வதைக் காணமுடியவில்லை.

அதிலும் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பின் பின்னர் யாரும் அதுபற்றி பேசியதாகத் தெரியவில்லை.

இப்போது பிரதான எதிர்க் கட்சியின் முக்கிய பிரச்னை என்ன என்பதை அவர்களின் பேச்சிலிருந்தே - குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சிலிருந்தே உணர்ந்து கொள்ளலாம்.

எதிர்க்கட்சியை உடைப்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்வதாகவே அண்மைய நாட்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குரலெழுப்பி வருகின்றார்.

அவரின் குரல் மிகவும் சுருதி இழந்து வருவதும் தெரிகின்றது. தமது அணியிலிருந்து யாரும் அரசு பக்கம் செல்ல மாட்டார்கள் என்று வீரவசனம் பேசிவந்த அவர், ஏனோ இப்போது ஜனாதிபதி ரணில் தனது கட்சியை உடைப்பதற்கு முயற்சி செய்கின்றார் என்றே கூறிவருகின்றார்.

ஒரு கட்சியிலிருந்து தலைவரைப் பிடிக்காமல் பிரிந்து செல்வது என்பது ஏதோ எப்போதும் நடக்காதது போலவும் ரணில் மாத்திரமே அதனைச் செய்வது போலவும் அவர் பேசுவதுதான் வேடிக்கையானது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒட்டுமொத்தமாக அவர் அனைவரையும் ஒருமித்து அள்ளிக் கொண்டு போய்த்தான் இன்றைய ஐக்கிய மக்கள் சக்தியை ஆரம்பித்ததை அவர் மறந்திருக்க வாய்ப்பில்லை.

அப்போது, அவர் ரணிலின் தலைமை மீது அதிருப்தி கொண்டே கட்சியிலிருந்து வெளியேறினார்.

ஆனால், இப்போது அவரின் கட்சியிலிருந்து யாராவது செல்கின்றார்கள் என்றால், அதற்கு என்ன காரணம் என்பதையும் அவர் ஆராய வேண்டும்.

நாடு இன்றிருக்கும் நிலையில் ரணில் ஒருவரே மீட்பராகத் தெரிகின்றார் என்பது இன்று சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றுதான்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக 'அறகலய'காரர்கள் போராட்டம் நடத்தியபோது, அவர்களின் பிரதான கோரிக்கையே 'கோட்டா வீட்டுக்குப் போ' என்பதாகத்தான் இருந்தது.

ஆனால் அவரோ, முதலில் மூத்த சகோதரர் மகிந்தவை பிரதமர் பதவியிலிருந்து வெளியேற்றினார்.

அப்போது அவர் ஜனநாயக மரபுகளை மதித்து, அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாஸவையே பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் அன்றைய நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததைத் தொடர்ந்தே, ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் அந்த சவாலை ஏற்றுக்கொண்டார்.

அப்போதும், போராட்டக்காரர்களின் கோபம் குறையவில்லை என்று நிதி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினார். அதற்குப் பின்னரும் போராட்டக்காரர்கள் அடங்கவில்லை. கடைசியில் கோட்டா பதவியை விட்டு வெளியேறி, ரணில் ஜனாதிபதியாகி இதுவரை அடைய முடியாத அந்த பதவிக்கான கதிரையில் அமர முடிந்தது.

இன்று பலரின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்வதுபோல நாடு சுயமாக மூச்சுவிடத் தொடங்கியிருப்பதற்கு ரணிலின் தலைமைத்துவமே காரணம் என்பதை தெற்கில் சாதாரண மானவர்கள்கூட ஏற்றுக்கொள்கின்றார்கள்.

அண்மையில் ஒரு தமிழ் அரசியல் மதியுரைஞர் ஒருவருடன் பேசிய போது, அவரிடம் கேட்டேன், 'அடுத்தது ஜனாதிபதி தேர்தல்தான் என்று ரணில் திட்டவட்டமாகக் கூறிவிட்டாரே, கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவரை வேட்பாளராக களம் இறக்கவேண்டும் என்று முயற்சி செய்தவர்களில் நீங்களும் ஒருவர்தானே. இப்போதே அதற்கான வேலையைத் தொடங்கலாமே' என்று.

அதற்கு அவர் சொன்னார், 'தமிழ் அரசியலில் அதற்கான சூழ்நிலையும் இப்போது இல்லை. அதைவிட ரணில் ஒருவரே இன்று முழுநாட்டினதும் தெரிவாக இருக்கும்போது அது தேவையற்றது' என்றார்.

ஆக, இன்று அடுத்த தேர்தல் என்றால் அது ஜனாதிபதி தேர்தல்தான் என்றாகிவிட்டது மாத்திரமல்ல, ரணிலே அதற்கான தெரிவு என்பதும் பலரின் கருத்தாக இருக்கின்றபோது, எதிரணியினர் இப்போது அமைதியாகிவிட்டது தெரிகின்றது.

அண்மையில், மற்றுமொரு பிரதான எதிரணி தலைவர் ஒருவரும் இரகசியமாக ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்திருக்கிறார்.

அடுத்த தேர்தல் ஜனாதிபதித் தேர்தல்தான் என்பதால், அதில் நீங்கள் போட்டியிட்டால் எத்தனை வீத வாக்குக்களை பெறுவீர்கள் என்று அவரிடமே ரணில் கேட்டதாகவும் அதற்கு அவர் பத்து முதல் பதினைந்து வீதம் வரையான வாக்குகளை பெறுவோம் என்றிருக்கிறார்.

அப்படியெனில் நீர் வேட்பாளராகி உமது பெயரைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம். உங்கள் கட்சி கூட்டணி சார்பில் ஒருவரை பொது வேட்பாரளராக களமிறக்குமாறும் யோசனை சொல்லி அனுப்பியிருக்கிறாராம்.

அந்த யோசனை அவருக்கு மிகவும் பிடித்துப்போகவே, அவரும் இப்போது ரணிலை எப்படி ஜனாதிபதியாக்குவது என்பதிலேயே கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்.

மேற்கின் தெரிவான ரணிலை எதிர்த்து களம் இறக்க இப்போது மேற்குக்கு எதிரான நாடு தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றது. எல்லோர் கவனமும் இப்போது அதில் இருப்பதால்,

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக கதைப்பதற்கு இப்போது தேர்தல் திணைக்களத்தைத் தவிர வேறு யாருமே இல்லை.!

**- ஊர்க்குருவி**

# நேரடி அரசியலில் இறங்கியமையால் தம் மீது விஷமத்தனமான அபத்தக் குற்றச்சாட்டுகள்!

## வித்தியாதரன் விசனம்; நிரூபிக்குமாறு அவர் சவால்

யாழ்ப்பாணம், ஏப். 06

தான் நேரடி அரசியலில் இறங்கியமையால், சில முகம் தெரியாத தரப்பினரும் பிரகிருதிகளும் தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்டு, அபத்தக் குற்றச்சாட்டுகளையும் விஷமத்தனமான - கேவலமான - புனைகதைப் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றனர் என்று மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் விசனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர்,

குற்றச்சாட்டுகளை சுமத்துவோர் வெறும் அடையாளம் வெளிப்படுத்தாத பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'சுத்துமாத்து' காரணங்களை கூறாமல், ஆதாரங்களையும் சான்றுகளையும் முன்வைத்துத் தமது குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படைகளையாவது நிரூபிப்பார்களா என்று பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

அத்தோடு குற்றச்சாட்டுகளை சுமத்துவோர் தங்களை பகிரங்கப்படுத்தாமல் ஒளித்திருந்து செயல்படுவது அவர்களது பேடித்தனத்தை காட்டுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு,

நீண்ட சுமார் 40 ஆண்டுகள் ஊடகப் பட்டறிவு கொண்ட நான் அரசியலில் நேரடியாக இறங்கியமையை அடுத்து என் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் துர்நோக்கில், வெளியில் தம்மை அடையாளப்படுத்தாத சில அநாமதேய சமூக ஊடகத் தரப்புகளும், ஓர் அச்சு ஊடகமும் வேண்டுமென்றே திட்டமிட்டுப் பொய்த் தகவல்களையும், ஆதாரமேயற்ற புனைகதைகளையும் பெரும் எடுப்பில் பரப்பி வருகின்றன என்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றேன்.

என் பொது வாழ்வில் இத்தகைய அபத்தக் குற்றச்சாட்டுகள் புதியவை.

யாழ். இந்து கல்லூரி மாணவர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றார் என்று வெளியான தகவலையொட்டி நடைபெற்ற பொலிஸ் விசாரணையைத் திரித்து, என் மீது பாலியல் குற்ற அவதூறு பிரசாரம் செய்வதற்கு இந்தத் தரப்புக்கள் அதனை விஷமத்தனமாகப் பயன்படுத்துகின்றன.

சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றதாகக் கூறப்படும் இந்த சம்பவத்துக்கும், எனக்கோ அல்லது நான் இதுவரை காலம் பணியாற்றிய காலைக்கதிர் பத்திரிகைக்கோ அல்லது அதன் ஊழியர்கள் எவருக்குமோ தொடர்பு ஏதும் இல்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

எனினும், இவ்விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் யாழ். பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான குற்ற விசாரணைப் பிரிவினர் பிரதான சந்தேக நபர் ஒருவரை அடையாளம் கண்டுள்ளனர் என நான் அறிகிறேன். அவர் தொடர்பான சி. சி. ரி. வி. கமரா பதிவுகளையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அந்தப் பிரதான சந்தேக நபர் எச்சமயத்திலும் கைதாகக் கூடும்.

கல்லூரி மாணவனுக்கும் கல்லூரியுடன் சம்பந்தப்படாத வெளியாள் ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவத்தை கல்லூரியை இலக்கு வைத்து பாலியல் வலை அமைப்பு இயங்குவதாகக் குறிப்பிட்டு, கல்லூரிக்கும் நிர்வாகத்துக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் கேவல சதி நடவடிக்கையும் ஊடகத்தின் பெயரால் தொடர்ந்து அரங்கேறுவது துரதிர்ஷ்டமாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதால் என்னையோ, எனது முன்னைய பத்திரிகையின் தற்போதய நிர்வாகத்தையோ, பத்திரிகையின் முன்னாள், இந்நாள் ஊழியர்கள் எவரையுமே பொலிஸார் விசாரணைக்குக்கூட அழைக்கவில்லை என்பதை பகிரங்கப் படுத்துவதோடு, இந்த விடயம் குறித்து தங்கள் அடையாளத்தையோ பொறுப்பு கூறலையோ வெளிப்படுத்தாமல் இவ்வாறு ஊடக அதர்மத்தை பிரதிபலிக்கும் இந்தப் பிரகிருதிகளை தங்கள் செய்திக்கான ஆதாரத்தை வெளிப்படுத்தி உண்மைத் தன்மையை நிரூபிக்கும் படியும் பகிரங்க சவால் விடுக்கிறேன்.


பெயர் விவரம் குறிப்பிடாத பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இத்தகைய அவதூறு ஏற்படுத்தும் செய்திக்கு வலுச்சேர்க்கும் பத்திரிகை அதர்மமும் யாழ்ப்பாணத்தில்தான் சர்வசாதாரணமாக தொடர்கின்றது. தங்கள் செய்தி திட்டமிட்டு பரப்பப்படும் விஷமத்தனமான வதந்தி என்பதை நன்கு அறிந்திருந்தும், 'பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன' என அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் வதந்திகளை அந்த ஊடகம் வெளியிடுவதும், அதை பொலிஸ் தரப்பு பார்த்திருப்பதும், இத்தகைய அதர்ம, அவதூறு, பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு பொலிஸ் தரப்பும் கூட பின்னணியும் காரணமுமா என்ற நியாயமான சந்தேகமும் எழுகின்றது.

என் பெயரை இந்த விடயத்துடன் தொடர்புபடுத்தி செய்தி வெளியிட்ட சில தரப்புகளை அடையாளம் கண்டுள்ளேன். அவற்றுக்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாட்டு தூதரகங்கள் ஊடாகவும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவிருக்கிறேன்.

உளளூர்ப் பத்திரிகை ஒன்று என் பெயர் குறிப்பிடாமல், நான் பணியாற்றிய பத்திரிகையின் பெயரையும் நேரடியாகக் குறிப்பிடாமல் அதை இழுத்துத் தனது வழமையான கிசுகிசுப் பாணி செய்தியாக இந்த விடயத்தைத் தன் முன் பக்கத்தில் மிகப் பெரிய ஐந்து 'கொலம்' புதினமாக வெளியிட்டு, தனது வக்கிரத்தை காட்டியுள்ளது. இத்தகைய அத்துமீறலலை - அக்கிரமத்தை - சுயநல அரசியலுக்காக அனுமதித்து, ஊக்குவித்து நிற்கும் அதன் நிர்வாகியும் கண்டிக்கப்பட வேண்டியவர் மட்டுமல்ல, தண்டிக்கப்படவும் வேண்டியவர்.

சட்டம் தன் பணியை செய்யும், தர்மம் நிலை நிறுத்தப்படும், காலம் உண்மைகளை வெளிப்படுத்தும் என்று நம்புகிறேன்- என்றுள்ளது.

# காங்கேசன்துறையில் குடிவரவு பணிமனை அமைக்கும் பணி!



யாழ்ப்பாணம், ஏப். 06

காங்கேசன்துறை - காரைக்கால் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், காங்கேசன்துறை துறைமுகத்தில் பயணிகள் தங்ககம் மற்றும் குடிவரவு - குடியகல்வு பணிமனையை அமைக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

முன்னதாக, எதிர்வரும் 29ஆம் திகதி முதல் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்காக குடிவரவு - குடியகல்வு பணிமனையை அமைக்க 14.4 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.

இந்த நிலையிலேயே கட்டடங்கள் அமைக்கும் பணிகள் விரைந்து முன்னெக் கப்பட்டு வருகின்றன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
06.04.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# அரசியல் தீர்விற்கான போராட்டம் எங்கே!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் போராட்டமென்பது கிட்டத்தட்ட தொல்பொருள் திணைக்களத்திற்கு எதிரான போராட்டமாக மாறி யிருக்கின்றது. திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றில் தொடங் கியது-பின்னர் குருந்தூர்மலையில் தரித்துநின்று, இப்போது வெடுக்குநாறிமலையை நோக்கிச் சென்றிருக்கின்றது. நிச்சயம் இதற்கு பின்னர் பிறிதொரு விடயம் நிகழும். குறித்த விடயம் நிகழும்போது, மீண்டும், தமிழ்த் தேசியக் கட்சிகள் அந்த இடத்தில் ஒன்றுகூடி அடுத்த கட்டப் போராட்டம் தொடர்பில் ஆராய்வர். இந்த பிரச்னைகள் அனைத்திற்குமான அடிப்படையான பிரச்னை, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகும். ஆகக் குறைந்தது மாகாண சபை முறைமையாவது, இயங்கு நிலையில் இருக்கவேண்டும். அதுவும் தற்போதில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பிலாவது கட்சிகள் பேசுகின்றனவா என்றால் அதுவும் இல்லை.

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து, இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) 13ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதாக கூறி, யாழ்ப்பாணத்தில் ஊர்தி வலம் வந்திருந்தனர். இதற்கு ஒரு சில புலம்பெயர் அமைப்புக்களும் உறுதுணையாக இருந்தன. ஓரிரு நாட்களுக்கான, 13-எதிர்ப்பு ஊர்தி வலத்துடன் முன்னணியின் அரசியல் தீர்விற்கான போராட்டம் முடிந்துவிட்டது. அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வின் அவசியம் தொடர்பில் பேசினார் - 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவாக கூறினார். வழமைபோல் முன்னணி 13ஆவது தீர்வில்லையென்று கூறிவிட்டு ஒதுங்கிவிட்டது.

13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுமா அல்லது இல்லையா என்பதில் சந்தேகங்கள் உண்டு. ஆனால் அதனை முழுமையாக அமுல்படுத்துவது அவசியமென்னும் கருத்தை பெரும்பான்மையான தமிழர் தரப்புக்கள் ஆதரிக்கின்றன. அது அமுல்படுத்தப்படுமாக இருந்தால், அதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகக் கொள்ள முடியும். அதனை ஒரு ஆரம்பப் புள்ளியாக நோக்கமுடியாதென்று வாதிடுவோருமுண்டு. அவர்களது கருத்தே சரியானதென்றால், தாங்கள் கூறும் சரியானதிற்காக அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றனர். 13 இற்கு அப்பால் செல்வதற் கான எத்தகைய போராட்டங்களை இதுவரையில் முன்னெடுத்திருக் கின்றனர்?

இன்றைய சூழலில், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், 13ஆவது தொடர்பில் பேசுவதே ஒரு வகையில் ஆறுதலானதுதான். ஏனெனில் அவ்வாறு பேசுகின்றபோது, கூடவே தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேகமான அரசியல் பிரச்னையொன்று இருப்பது நினைவூட்டப்படுகின்றது. அந்த வகையிலும் 13 ஒரு ஆறுதலான விடயம்தான். ஆனால் ஒற்றையாட்சி முறைமைக்குள் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டம் ஒரு தீர்வல்ல, அதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறுவோர், தாங்கள் கூறுவதை அடைவதற்காக, கடந்த 13 வருடங்களில் எவ்வாறான அர்ப்பணிப்புக்களை காண்பித்திருக்கின்றனர்? அவ்வப்போது அறிக்கைகள் வெளியிட்டதற்கு அப்பால் - பாராளுமன்றத்தில் பேசியதற்கு அப்பால்?

கூட்டமைப்பு சமஷ்டியை வலியுறுத்தியதை எதிர்ப்பதற்கு - "ஒரு நாடு இரண்டு தேசங்கள்" - என்று பிறிதொரு சுலோகத்தை காங்கிரஸ் உயர்த்தியது. சமஷ்டியை கூட்டமைப்பால் அடைய முடியாது - ஆனால் மக்கள் எங்களை தெரிவு செய்தால் - நாங்கள் ஒரு நாடு இரண்டு தேசத் தீர்வை பெற்றுத் தருவோமென்பதுதான் காங்கிரஸின் வாதம். ஆனால் கடந்த 13 வருடங்களில் இவர்கள் முன்வைத்த சுலோகங்கள் ஆகக் குறைந்தது, அவர்களது கட்சியிலுள்ளவர்களுக்காவது விளங்கியதாக தெரியவில்லை.

கூட்டமைப்பால் சமஷ்டிக்காக போராட முடியவில்லை - அவர்கள் போராடப் போவதுமில்லை - அவ்வாறாயின் ஏனையவர்கள் தாங்கள் கூறும் விடயங்களை அடைவதற்காக போராட வேண்டுமல்லவா? ஒட்டுமொத்தமாக நோக்கினால், தாங்கள் கூறும் எதுவும் சரிவரப் போவதில்லையென்பதில் - அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுமே தெளிவாகவே இருக்கின்றனர். இந்த இடத்தில்தான் யதார்த்த ரீதியாக விடயங்களை முன் வைப்பவர்களின் வாதம் பலமடைகின்றது.

# முல்லைத்தீவில் வீதியோரம் முதியவரின் சடலம் மீட்பு!

*முல்லைத்தீவு, ஏப். 06*

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பகுதியில் வீதியோரமாக வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு மூன்று முறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் வயல் வெளிபகுதியில் வீதி ஓரத்தில் அடையாளம் காணப்பட்டிருந்தது. உயிரிழந்தவர் வவுனியா - முள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த 71 வயது நபராவார்.

கால்நடைகளை மேய்ப்பதற்காக சென்றவர்களினால் குறித்த சடலம் அடையாளம் காணப்பட்ட நிலையில் நட்டாங்கண்டல் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நட்டாங்கண்டல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 29*

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் "இந்துக்கள் வாழ்வில் சித்திரை" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## பங்குனி குளிர்த்தி அபிஷேகம்!

*வடமராட்சி, ஏப். 06*

பருத்தித்துறை கோட்டடி சண்டிகா பரமேஸ்வரி அம்மன் கோவில் பங்குனி குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அபிஷேகத்தை கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ வாசுதேவ வத்சாங்கக் குருக்கள் நடத்திவைப்பார் தொடர்ந்து பகல்11 விசேட பூசையுடன் அபிஷேகம் நிறைவுறும். (ஐ-02)



முருகப் பெருமானுக்கு உகந்த நாளான பங்குனி உத்தரமான நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்தியபோது... (படம் - ஐ. சிவசாந்தன்)

## சுழிபுரம் கலைமகள் முன்பள்ளி கால்கோள், கௌரவிப்பு நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஏப். 06*

சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியில் கால்கோள் விழாவும் 32 வருட சேவையாற்றிய ஆசிரியருக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் வ. கோகுலநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக முதலாம் தரத்துக்கு சென்ற கலைமகள் முன்பள்ளியின் மாணவர்களுக்கு பிரிவுபசார நிகழ்வும் தொடர்ச்சியாக புதிதாக முன்பள்ளிக்கு வருகைதந்த மாணவர்களுக்கான கால்கோள்விழாவும் நடைபெற்றன.

தொடர்ச்சியாக முன்பள்ளியில 32 வருட காலமாக பணியாற்றி 60ஆவது அகவையை பூர்த்தி செய்த கலைமகள் முன்பள்ளியின் சிரேஷ்ட ஆசிரியர் நின்மதி பன்னீர்செல்வத்துக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் சமூக மட்ட அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முன்பள்ளியின் மாதாந்த செயல்பாட்டின் ஓர் அங்கமாக ஆத்திசூடி மனன போட்டி முன்னெடுக்கப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது. (ஐ - 03)

## அதிக விலைக்கு முட்டை விற்ற 9 பேருக்கு அபராதம்


*கொழும்பு, ஏப். 06*

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த 9 நபர்களுக்கு அங்குனகொலபெலஸ்ஸ நீதிமன்றம் 9 இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை குறித்த நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளை முட்டை 44 ரூபாவுக்கும் சிவப்பு முட்டை 46 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவேண்டுமென குறிப்பிட்டு அதிகார சபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**மிதுனம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனையை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். சூட்சுமங்களை தாண்டி முன்னேறுவீர்கள்.

**கடகம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. திட்டங்களை தீட்டுவீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்கள் கை ஓங்கும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருந்துக் கொண்டே இருக்கும். வளைந்து கொடுத் துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**துலாம்**
காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். புது முதலீடு செய்யலாம். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**விருட்சிகம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**தனுசு**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சில நுணுக்கங் களை கற்றுக் கொள்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புது தொடர்பு கிடைக்கும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். மறைமுக நெருக் கடிகள் வந்து நீங்கும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**மீனம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள்.

# டெல்டாவில் புதிய நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு அனுமதிக்க மாட்டோம்

## தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்

சென்னை, ஏப். 06

டெல்டா மாவட்டங்களில் புதிய நிலக்கரி சுரங்கம் அமைக்க தமிழ்நாடு அரசாங்கம் அனுமதி அளிக்காது என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள சேத்தியாத்தோப்பு, மைக்கேல்பட்டி, வடசேரியில் தனியார் மூலம் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இது ஒட்டுமொத்த டெல்டா பகுதி விவசாயிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன், நிலக்கரி சுரங்கங்கள் அமைக்கும் முயற்சியை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும், இது தொடர்பாக மத்திய அரசுக்கு, தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், நிலக்கரி சுரங்க ஏல ஒப்பந்த நடைமுறையில் இருந்து காவிரி டெல்டா பகுதிகளை விலக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதி இருந்தார். இந்நிலையில், டெல்டா பகுதியில் நிலக்கரி சுரங்கம் அமைக்க மத்திய அரசு வெளியிட்ட ஏல அறிவிப்புக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் சார்பில் சிறப்பு கவன வீர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதற்குப் பதில் அளித்த தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, “டெல்டாவில் நிலக்கரி சுரங்க ஏல விவகாரத்தில் முதல்வர் வேகமாக செயல்பட்டு, உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். நிலக்கரி அமைச்சகத்திடம் வலியுறுத்திய அதிகாரிகளும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டாம் எனக் கூறியுள்ளனர். தமிழக அரசு ஒருபோதும் இத்திட்டத்தை அனுமதிக்காது என்பதை திட்டவட்டமாக கூறுகிறோம்.” என்றார்.

இதனைத் தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் மு. க. ஸ்டாலின், “இந்த செய்தி வந்தபோது உங்களைப் போன்றுதான் நானும் அதிர்ச்சி அடைந்தேன். செய்தியைப் பார்த்த உடன் அதிகாரிகளுடன் பேசி, உடனடியாக பிரதமருக்கு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தின் நகலை அமைச்சரிடம் அளிக்க வேண்டும் என்று தி. மு. க. பாராளுமன்ற குழுத் தலைவரிடம் கூறி இருக்கிறேன். நானும் டெல்டாகாரன்தான். உங்களைப் போன்று நானும் உறுதியாக இருப்பேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழக அரசு இதற்கு அனுமதி அளிக்காது.” என்றார்.

(ஐ)

# காங்கிரஸ் - பா. ஜ. க. மோதல் 14 பேர் கைது; 53 பேர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப். 06

நாகர்கோவிலில் பா. ஜ. கவினர் - காங்கிரஸார் இடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் 53 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பா. ஜ. க. மாவட்டத் தலைவர் உட்பட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் எம். பி. பதவி இழப்பைக் கண்டித்து குமரி மாவட்டத் தில் காங்கிரஸ் கட்சியினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாகர்கோவிலில் நடந்த போராட்டத்தில் பா. ஜ. கவினர், காங்கிரஸினர் மோதலில் ஈடுபட்டனர்.

இந்த மோதலில் இரு தரப்பிலும் 6 பேர் காயமடைந்தனர். இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்கள் உட்பட 25 பேர் மீதும், பா. ஜ. க. கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்கள் 28 பேர் மீதுமாக 53 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் காங்கிரஸ், பா. ஜ. க. கட்சி களை சேர்ந்த 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ)

# அ. தி. மு. க. கட்சி இனி ஓஹோ என வளரும்!



## பழனிசாமி சொல்கிறார்

சென்னை, ஏப். 06

“பௌர்ணமி மற்றும் பங்குனி உத்தரம். இந்த நல்ல நாளில் உறுப்பினர் சேர்க்கையை தொடங்கியுள்ளதால் அ. தி. மு. க. ஓஹோ என வளரும்.”, என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. கவின் பொதுச் செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்றுள்ள இந்நிலையில், இன்று முதல் உறுப்பினர் சேர்க்கைக்கான படிவம் விநியோகிக்கப்படுகிறது.

“தற்போது அ. தி. மு. கவில் ஒன்றரை கோடி உறுப்பினர்கள் உள்ளார்கள். அதை இரண்டு கோடியாக உயர்த்துவதே இலக்கு. 50 இலட்சம் புதிய உறுப்பினர்களை சேர்க்க மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்று (நேற்று) பௌர்ணமி மற்றும் பங்குனி உத்தரம். இந்த நல்ல நாளில் உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி உள்ளதால் அ. தி. மு. க. ஓஹோ என வளரும்.” என்று தெரிவித்தார்.

(ஐ)

# கீழடியில் ஆய்வுகள் மீள ஆரம்பம்!

திருப்புவனம், ஏப். 06

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் அகழாய்வு பணி 2015ஆம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 8 கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்றுள்ளன. மத்திய தொல்லியல் துறை 3 முறையும் தமிழக தொல்லியல்துறை 5 முறையும் அகழாய் வுப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

அகழாய்வு மூலம் கிடைத்த பல ஆயிரம் தொல் பொருட்களைப் மக்கள் பார்வையிடும் வகையில் 18.46 கோடி (இந்திய) ரூபாயில் கொந்தகையில் கீழடி அகழ் வைப்பகம் கட்டப்பட்டு அதை மார்ச் 5இல் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்நிலையில், கீழடி 9-ம் கட்ட அகழாய்வுப் பணியை முதல்வர் ஸ்டாலின் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார். கீழடி, அகரம், கொந்தகை என 3 இடங்களில் ஆய்வுகள் நடைபெறவுள்ளன.

(ஐ)

# கோயில் தீர்த்தத் திருவிழாவில் 5 அர்ச்சகர்கள் நீரில் மூழ்கி பலி!

சென்னை, ஏப். 06

சென்னை நங்கநல்லூர் தர்மலிங்கேஸ்வரர் கோயில் திருவிழாவின் போது 5 அர்ச்சகர்கள் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோயில் திருவிழாவை முன்னிட்டு தீர்த்த உற்சவம் நடைபெற்றது. இதன்போது 25 அர்ச்சகர்கள் ஒரே நேரத்தில் குளத்தில் இறங்கியுள்ளனர். சுவாமியை நீராட்டும் நிகழ்வுக்காக இவர்கள் குளத்தில் இறங்கியுள்ளனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக சிலர் தண்ணீரில் மூழ்கியுள்ளனர். உடனடியாக தீயணைப்புத் துறையினர் வந்து மீட்புப் பணிகளை தொடங்கினர். இந்நிலையில், நேற்று 5 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

(ஐ)

# 2024 இறுதியில்தான் ஜனாதிபதித் தேர்தல்

## முன்கூட்டி நடத்துவது சாத்தியமற்றது என்கின்றார் மகிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஏப். 06

**அடுத்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி நான்கு ஆண்டுகள் பதவி வகித்ததன் பின் எந்த நேரத்திலும் தேர்தலை அறிவிக்க முடியும் என சிலர் வாதிட்டு வருகின்றனர்.

எனினும், தற்போதைய ஜனாதிபதி பாராளுமன்றினால் தெரிவு செய்யப்பட்டவர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகியதனைத் தொடர்ந்து அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டவர்.

இவ்வாறான ஓர் பின்னணியில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை முன்கூட்டி நடத்துவது சாத்தியமற்றது.

பதவிக் காலம் முடிவடையும் முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டுமாயின் உயர் நீதிமன்றின் சட்ட விளக்கத்தை கோருவதே பொருத்தமானது-என்றார். (அ)

# மேலும் ஒரு தொகுதி முட்டை இலங்கைக்கு

கொழும்பு, ஏப். 06

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றுமொரு தொகுதி முட்டைகள் நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுவரை 04 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

கடந்த 23 ஆம் திகதி முதல் தடவையாக 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், சுமார் 4 நாட்களுக்கு முன்னர் மேலும் 1 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த முட்டை இருப்பு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் நேற்று ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆசிறி வலிசுந்தர தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை சாதாரண நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கல்விமாணிப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஏப். 06

நாட்டில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவும், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு, கல்விமாணிப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, வடக்கு, வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, தென் மற்றும் மேல்மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விமானிப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் போதாமையினால், மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்காக கல்விமானிப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையில் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அனுமதி வழங்கப்படவில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# கொத்து ரொட்டி, பிரைட் றைஸ் 20 வீதத்தினால் விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 06

நாட்டில் கொத்து ரொட்டி மற்றும் பிரைட் றைஸ் ஆகியன வற்றின் விலைகள் 20 வீதத்தினால் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்தார்.

சோற்றுப் பொதிகளின் விலைகளும் 20 வீதத்தினால் குறைக்கப்பட உள்ளதாக அவர் அறிவித்தார்.

சமையல் எரிவாயுவின் விலை குறைப்பு காரணமாக இவ்வாறு விலை குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேநீரின் விலை 30 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பால் தேநீரின் விலை 90 ரூபாவாகவே காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இந்த விலை மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியில் 98 ஏக்கர் காணியை தனியார் நிறுவனத்துக்கு விற்க முயற்சி!

## மக்கள் திரண்டு எதிர்ப்பு



கிளிநொச்சி, ஏப். 06

கிளிநொச்சியில் 98 ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கும் திட்டமானது பொதுமக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது.

நில அளவீட்டை மேற்கொள்வதற்காக நில அளவீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் நில அளவீடு செய்வதற்கு சென்றபோது பொதுமக்களால் நில அளவீட்டுப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

கிளிநொச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கௌதாரி முனை கிராம அலுவலர் பிரிவில் இறால் வளர்ப்பு திட்டத்திற்கு 98 ஏக்கர் காணியினை தனியார் ஒருவருக்கு வழங்கும் நோக்கில் நேற்று முன் தினம் நில அளவீடு செய்ய முற்பட்டபோது நில அளவீட்டுப் பணிகள் பொது மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளின்மை, 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்த காணிகள் இன்றி வாழுதல் என பல்வேறு காணித்தேவைகள் உள்ளன.

இருப்பினும் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகள் உள்ளடங்கலாக 98 ஏக்கர் காணியை தனியாருக்கு வழங்கும் நோக்கில் நில அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருந்த நிலையில் அளவீட்டுப்பணிகள் தடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காணித் தேவைகள் உள்ள நிலையில் தமது பகுதியில் உள்ள காணிகளை வழங்க முடியாது என்றும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன் சென்று பொது மக்களுடன் கலந்துரையாடியதுடன் இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோத சுருக்குவலை தொழிலை உடன் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 06

சுருக்குவலை கடற்றொழிலை முழுமையாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் கூட்டாக தெரிவித்துள்ளன.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்- சுருக்கு வலைக்கு அனுமதி வழங்கப்பட்ட இரண்டே முக்கால் கண் கொண்ட வலையை பயன்படுத்தாமல் அதற்கு குறைவான கண்கொண்ட வலைகளை பயன்படுத்தி சுருக்கு வலைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் காரணமாக அதிகளவிலான சிறிய மீன்கள் வலைகளில் அகப்படுவதனால் பாரம்பரியமாக கடற்தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு உரிய சந்தை வாய்ப்பு கிடைப்பதில்லை. அது மட்டுமல்லாது சுருக்கு வலைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் வெளிச்சம் பாய்ச்சுதல், டைனமற் அடித்தல் காரணமாக கடல் வாழ் உயிரினங்களின் பல்வகைத் தன்மை அழிவடைவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

சட்டவிரோத சுருக்குவலை தொழிலை கட்டுப்படுத்த பணிப்புரை அண்மையில் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சட்டவிரோத சுருக்கு வலைத்தொழிலை கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய 70 வீதமான சட்டவிரோத சுருக்குவலைத் தொழில்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமைக்கு சங்கங்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆகவே வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத சுருக்கு வலைத்தொழிலை தொடர்ச்சியாக கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றனர். (அ)

# தியவன்னா ஓயாவிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப்ரல் 6

பத்தரமுல்லை தலங்கம கிம்புலா எல்ல பிரதேசத்திலுள்ள தியவன்னா ஓயாவிலிருந்து அடையாளம் காணப்படாத ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று காலை மீட்டுள்ளனர்.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் இளஞ்சிவப்பு நிறத்திலான மேற்சட்டையும் நீல நிறகாற்சட்டையும் அணிந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் மீன்பிடிப்பதற்காக சென்று வாவியில் விழுந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-கே)

# சஜித் - தயாசிறி இரகசிய பேச்சு!

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு

கொழும்பு, ஏப். 06

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.**

**சஜித் பிரேமதாஸவின் கொழும்பு இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பிலேயே இதன்போது பேசப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி எதிர்காலத்தில் ஆதரவு வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர, சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த சந்திப்பை மிக இரகசியமாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், தற்போது அது பற்றிய அனைத்து தகவல்களும் வெளியாகியுள்ளதால் இரு தரப்பினரும் கவலையடைந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவை தான் சந்திக்கவில்லை என தயாசிறி ஜயசேகர தெரி வித்துள்ளார்.

தனது நண்பரை சந்திக்கச் சென்றதை அடிப்படையாக வைத்து சிலர் இந்த பிரசாரத்தை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சிங்கள மயமாக்கலுக்காக அர்ப்பணிப்போடு செயல்படுகிறது தொல்பொருள் திணைக்களம்

## சபையில் கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 06

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம் சிங்கள மயமாக்கலுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.



தொல்பொருள் திணைக்களம் முப்படைகளின் ஆதரவுடன் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் இருப்புக்கள் இல்லாதொழிக்கப்படுகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர், பௌத்த பிக்குகளுக்கு துப்பாக்கி ஏந்திய மெய்ப்பாதுகாவலர்களை வழங்கியது யார் என்றும் இது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

நாட்டில் புரையோடிபோயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு காணாமல் பொருளாதார முன்னேற்றத்திற்காக சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு தமிழ், முஸ்லிம் சமூகத்தை முழுமையாக கருவறுக்கும் செயற்பாடுகள் அரச ஆதரவுடன் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தாம் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்றாலும் இனவாதத் தலைவர்களைத் தெரிவு செய்வதை சிங்கள மக்கள் இனியாவது தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

# வேலைநிறுத்தத்தைக் கைவிட்டது மதுவரி திணைக்கள தொழிற்சங்கம்

கொழும்பு, ஏப். 06

இன்று வியாழக்கிழமை முன்னெடுக்கவிருந்த ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தை இடைநிறுத்துவதற்கு மதுவரித் திணைக்கள தொழிற்சங்கம் தீர்மானித்துள்ளது.

கொடுப்பனவுகள் தொடர்பிலான தமது கோரிக்கைகளை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என தொழிற்சங்கம் தீர்மானித்திருந்தது.

இருப்பினும் ஒரு மாத காலத்துக்குள் தீர்வை வழங்குவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில் இன்று முன்னெடுக்கவிருந்த ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தை இடைநிறுத்துவதற்கு மதுவரித் திணைக்கள தொழிற்சங்கம் முடிவு செய்துள்ளது.

# ஹரக் கட்டாவின் மனைவியை கைது செய்ய இன்டர்போல் உதவியை நாடுகின்றது சி.ஐ.டி!

கொழும்பு, ஏப். 06

மடகஸ்காரில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்னவின் மனைவியை கைது செய்ய இன்டர்போலின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகரான ஹரக் கட்டா மற்றும் அவரது சகாவான குடு சலிந்து என அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக குணரத்ன உள்ளிட்ட 8 சந்தேக நபர்கள் மார்ச் 8ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக மடகஸ்காரில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்தனர்.

பின்னர், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மடகஸ்காருக்கு குழுவொன்றை அனுப்பி அவர்களைத் நாட்டுக்கு அழைத்து வந்தது. மேலும் கைதான இருவரும் கென்யாவின் நைரோபி, இந்தியாவின் மும்பை வழியாக கடந்த மார்ச் 15 ஆம் திகதி இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது 90 நாட்கள் தடுப் புக் காவலில் வைக்கப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதன்படி, விசாரணைகளின் போது ஹரக் கட்டா வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில், மேலதிக விசாரணைகளுக்காக சர்வதேச பொலிஸாரின் (இன்டர்போல்) உதவியுடன் அவரது மனைவியை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)



# சுகாதார அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதற்குத் தயார்!

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, ஏப். 06

எதிர்காலத்தில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டு தமக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கினால் அதனை ஏற்றுக்கொள்ளத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பண்டாரகம தனியார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எப்பொழுதும் அரசியல் சார்ந்து முடிவு எடுப்பதனால் தான் மக்கள் தம்மை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். (அ)

# தாளையடி நன்னீர்த் திட்டம் 2024 முற்பகுதிக்குள் பூர்த்தி!

கிளிநொச்சி, ஏப். 06

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டத்தை 2024 ஆம் ஆண்டு முற்பகுதிக்குள் முழுமைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

வவுனியா நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் வவுனியா பேராறு நீர் வழங்கல் திட்டத்தை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு மாகாணத்துக்கு கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், வவுனியா பேராறு நீர் வழங்கல் திட்டத்தை பார்வையிட்டதுடன், அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

தற்போதைய நிலைவரம் மற்றும் விஸ்தரிப்புக்கான தேவைப்பாடுகள் பற்றியும் அமைச்சர் கேட்டறிந்தார். அதன்பின்னரே குறித்த அறிவிப்பை விடுத்தார்.

அத்துடன், வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டத்தையும் அமைச்சர் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கரவெட்டி, கொடிகாமம் மற்றும் புத்தூர் என பல பிரதேசங்களுக்கு இந்த திட்டத்தின் ஊடாக குடிதண்ணீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

"மேற்படி நீர்வழங்கல் திட்டத்தை 2023 ஏப்ரலில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை மற்றும் பணவீக்கத்தால் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும், 2024 முற்பகுதிக்குள் இத்திட்டத்தை முழுமைப்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் செயல் திட்ட முகாமையாளர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத்திட்டம் ஊடாக 3 லட்சம் மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும்" - எனவும் அமைச்சர் இதன்போது கூறினார். (அ)

# பஸ் கட்டணம் ஜூலை திருத்தம்

கொழும்பு, ஏப். 06

எதிர்வரும் ஜூலை மாதம் மீண்டும் பஸ் கட்டணங்கள் திருத்தப் படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

உதிரிப்பாகங்களின் விலை குறைக்கப்பட்டால் அதன் பயனை பயணிகளுக்கும் வழங்க முடியும் என அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# போதை மாத்திரைகளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஏப். 06

களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் கான்ஸ்டபிள் ஒருவரை போதைப்பொருளுடன் களுத்துறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையில் பணி புரியும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 56 போதை மாத்திரைகள் அவரிடம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

ஈழநாடு



# எதிர்காலப் பயணம் கடினமாக அமையும்!

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 06

எதிர்காலத்தில் மிகவும் கடினமான பயணம் உள்ளது. எனவே அடுத்த நான்கு வருடங்களில் நிலையான முன்னேற்றப் பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தின் முன்னேற்றம் குறித்து ஊடகங்கள் முன்னிலையில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களிடம் கடன் மறுசீரமைப்பு சவால் உள்ளது. அடுத்து, சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தில் பல முக்கிய சீர்திருத்தங்கள் உள் ளன.

இதுபோன்ற பல விடயங்களை இப்போது நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அடுத்த நான்கு வருடங்களில் அந்தப் பயணம் தொடரவில்லை என்றால், இரண்டடி எடுத்துவிட்டு ஒரு அடி பின்னோக்கிச் சென்றால், மலை ஏறி நிலையான இடத்தைப் பெறவேமுடியாது -என்றார். (அ)

# இலங்கையின் பொருளாதாரம் 2024இல் வளர்ச்சிப் பாதைக்கு!

## ஆசிய அபிவிருத்தி வங்கி கூறுகிறது



கொழும்பு, ஏப். 06

இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் வீழ்ச்சியடைந்த பின்னரே மீண்டும் 2024 இல் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் என ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

2022 இல் 7 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் 2023 இல் மூன்று வீதத்தினால் வீழ்ச்சியடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வு கூறியுள்ளது.

இலங்கை மீட்சிக்காக நீண்ட பாதையில் பயணிக்க வேண்டும். வறியவர்களும் நலிந்தவர்களும் பாதுகாக்கப்படுவது அவசியம் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பிரதி இயக்குநர் உட்சவ் குமார் தெரிவித் தார். (அ)

# மக்கள் விடுதலை முன்னணியின் நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், ஏப். 06

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் 52ஆவது ஏப்ரல் வீரர்கள் ஞாபகார்த்த தினம் நடைபெற்றுள்ளது.

இலங்கையில் 1971 ஏப்ரல் 5ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டம் ஆரம்பித்த நிலையில் அதில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில், கிளர்ச்சியில் உயிரிழந்த வீரர்களுக்கான நினைவேந்தல் இடம்பெற்றது டன் கட்சி அமைப்பாளர்களின் உரையும் இடம்பெற்றது.

இதில் கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உடன்படிக்கையின் பிரகாரம் செயல்படாவிட்டால் சர்வதேச நாணய நிதிய கடன் பெறுவதில் சிக்கல்!

## நிலைமையை விளக்குகிறார் அமைச்சர் பந்துல



கொழும்பு, ஏப். 06

உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படத் தவறினால் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கடனைப் பெற முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தை தெரிவித்தார்.

அரசாங்க வருமானங்களை அதிகரிக்குமாறும், அரச நிறுவனங்களின் லாபத்தை அதிகரிக்குமாறும் சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை, வரிச் சலுகைகள மக்களுக்கு வழங்கவும் அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் எரிவாயு மற்றும் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் வரி செலுத்துகையில் மக்களுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (அ)

# அரசின் 450 நிறுவனங்கள் 10 வருடங்களாக நட்டத்தில்

கொழும்பு, ஏப். 06

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகளில் எத்தகைய அரசியல் தலையீடுகளும் கிடையாது. தேசிய நிறுவனம் ஒன்றின் மூலமே அது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என நிதி இராஜங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் எழுப் பப்பட்ட நிலையியற் கட்டளை 27ன் கீழ் 2 கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த பத்து வருடங்களில் 450 அரச நிறுவனங்கள் நட்டத்திலேயே இயங்கி வந்துள்ளன. 2012 ஆம் ஆண்டில் 183 பில்லியன் 2013 ஆம் ஆண்டு 186 பில்லியன் 2014 ஆம் ஆண்டு 186 பில்லியன் என நட்டம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் 2015 ஆம் ஆண்டு 271 பில்லியன் 216 ஆம் ஆண்டு 180 பில்லியன் 217 ஆம் ஆண்டு 260 பில்லியன் 2018 ஆம் ஆண்டு 265 பில்லியன் 2019 ஆம் ஆண்டு 268 பில்லியன் என இந்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கியுள்ளன.

அந்த வகையில் 2020 ஆம் ஆண்டு 436 பில்லியன் 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டில் முறையே 337 பில்லியன் மற்றும் 322 பில்லியன் என இந்த நிறுவனங்கள் மூலம் நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகளில் எத்தகைய அரசியல் தலையீடுகளும் கிடையாது. தேசிய நிறுவனம் ஒன்றின் மூலமே அது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நிதியமைச்சின் கீழ் செயற்படும் மேற்படி நிறுவனம் தொழில் ரீதியாக பணிப்பாளர் சபையின் கீழ் நிறுவனங்கள் சட்டத்தின் நியமங்களின் படி உரிய நிர்வாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது-என்றார். (அ)

# பத்மநாபாவின் சிலை வவுனியாவில் திறப்பு!



வவுனியா, ஏப். 06

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர். எல்.எவ்) ஸ்தாபகத் தலைவரும் அதன் முதலாவது செயலாளர் நாயகமுமான க.பத்மநாபாவின் திருவுருவச் சிலை நேற்று புதன் கிழமை திரைநீக்கம் செய்யப்பட்டது.

வவுனியா மணிக்கூண்டு கோபுரத்திற்கு எதிரில் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள க.பத்மநாபாவின் சிலையை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் க. சுரேஷ் பிரேமச்சந்திரன் திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். (அ)

# சட்டவிரோதமாக கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 17 மீனவர் குடாரப்புவில் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 06

நாகர்கோவில் மற்றும் குடாரப்புப் பகுதியில் சட்டவிரோத கடலட்டைத் தொழிலில் ஈடுபட்ட 17 மீனவர்கள் கைதாகினர்.

கைதானவர்களிடமிருந்து 6 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடற்படையினர் நேற்று முன் தினம் மேற் கொண்ட தேடுதலின்போது, குறித்த மீனவர்கள் கைதாகினர்.

இதன்படி, நாகர்கோவில் கடற்பகுதியில் சட்டவிரோத கடலட்டை தொழிலில் ஈடுபட்ட 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் இருந்து ஆயிரத்து 305 கடலட்டைகளும், 4 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இதுதவிர, குடாரப்பு கடற்பகுதியில் அனுமதி பத்திரம் இன்றி கடலட்டைத் தொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைதாகினர்.

கைதானவர்களிடம் இருந்து ஆயிரத்து 700 கடலட்டைகளும், இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித் துள்ளது. (அ)

## ரஷ்ய அதிபர் புடினை கைது செய்வது சாத்தியமா?

# உக்ரைன் போர்க்குற்ற வழக்கில் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை!





யுக்ரேன் போர்க்குற்றம் தொடர்பான வழக்கில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த மார்ச் 17-ம் தேதியன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. சர்வதேச அரசியலில் இது முக்கிய நகர்வாக பார்க்கப்படுகிறது.

யுக்ரேனில் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள பிராந்தியத்தில் இருந்து குழந்தைகளை வலுக்கட்டாயமாக ரஷ்யாவுக்கு அனுப்பினார் என்பது புடின் மீதான குற்றச்சாட்டு.

ரஷ்யாவின் குழந்தைகள் நல ஆணைய தலைவர் மரியா லோவா-பெலோவாவுக்கும் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.




யுக்ரேனில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்துள்ள ரஷ்யா, சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவுகளை பொருட்படுத்தப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

யுக்ரேன் போர்க்குற்ற வழக்கில் புதினை விசாரணைக்கு உட்படுத்துவது சாத்தியமா?

### போர்க்களத்தில் மனிதநேயம்

*1862-ம் ஆண்டு* சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பிரபல மனித ஆர்வலர் ஹென்ரி டுனோ எழுதிய ‘மெமரி ஆப் சொல்பெரினோ” என்ற புத்தகம் வெளியானது. இத்தாலியில் போரின் மீது ராணுவ வீரர்கள் சித்ரவதை செய்யப்பட்டதை விவரித்த அந்த புத்தகம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அந்த புத்தகம் வெளியான ஓராண்டு கழித்து, ஐரோப்பாவைச் சேர்ந்த 12 நாடுகள் கூடி, ராணுவ வீரர்கள் சித்ரவதையை தடுக்கும் பொருட்டு முதல் ஜெனிவா ஒப்பந்தம் என்று வர்ணிக்கப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

ஜெர்மனியைச் சேர்ந்த நியூரம்பர்க் சிந்தாந்த கல்வி நிலையத்தின் இயக்குநர் கிளாஸ் கிரெய்சோவிச், இதற்கு விரிவான விளக்கம் அளித்துள்ளார்.

‘அந்த ஒப்பந்தப்படி, போரின் போது கொடூரச் செயல்களில் ஈடுபடுவதும் சித்ரவதை செய்வதும் தடை செய்யப்பட்டது. போர்க்களத்தில் காயம்பட்ட எதிரி நாட்டு வீரர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்தவும் அந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. மருத்துவமனைகள் போன்ற பொதுமக்கள் பயன்பாட்டிற்கான இடங்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் அது தடை செய்கிறது” என்று அவர் கூறுகிறார்.

### ஜெனிவா மாநாடு

போரின் போது எதிரி நாடுகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அட்டூழியங்கள் மற்றும் காழ்ப்புணர்ச்சிக்கு கடிவாளம் போடுவதற்கான முக்கிய முயற்சி இது. அடுத்து வந்த ஆண்டுகளில், கூடுதல் விதிகளும், வழிகாட்டு நெறிமுறைகளும் சேர்க்கப்பட்ட இந்த ஒப்பந்தம் ஜெனிவா ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

ஜெனிவா ஒப்பந்தங்களை பின்பற்றுவது கட்டாயம் என்ற நிர்பந்தம் இல்லாததால் இது களத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

‘ஜெனிவா ஒப்பந்தங்களும், ஹேக் ஒப்பந்தங்களும் பல்வேறு வகையான போர் முறைகளை தடை செய்தன. ஆனால், அவற்றைப் பின்பற்றாதவர்களை எவ்வாறு தண்டிப்பது என்பது குறித்த எந்தவொரு விதிகளும் அதில் இல்லை. இதுதான் ஜெனிவா ஒப்பந்தங்களின் மிகப்பெரிய குறையாகும்” என்கிறார் கிளாஸ் கிரெய்சோவிச்.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இந்த பிரச்னையும் கவனம் பெறத் தொடங்கியது.

*1919-ம் ஆண்டிற்குப்* பின்னர், இத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபடுவோரைத் தண்டிக்க பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஒப்பந்தம் செய்து கொண்டதாக கிளாஸ் கிரெய்சோவிச். இந்த ஒப்பந்தத்தில் சேராத நெதர்லாந்தில் புகலிடம் தேடிக் கொண்டதால் ஜெர்மன் மன்னர் கெய்சரை தண்டிக்க முடியவில்லை. அதனால்தான், போர்க் குற்றங்களுக்காக கெய்சர் ஒருபோதும் தண்டிக்கப்படவே இல்லை. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் *1945-ம் ஆண்டில்* போர்க்குற்றவாளிகளை தண்டிக்க நேச நாடுகள் புதிய ஒப்பந்தம் கண்டன.

‘*1945-ம் ஆண்டு* ஆகஸ்டில் லண்டனில் நேச நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தம் பெரிய மாற்றத்திற்கு வழிவகுத்தது. போரின் போது தனியாகவோ, அரசு சார்பிலோ அட்டூழியங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க நியூரம்பர்க் நகரில் சர்வதேச ராணுவ நீதிமன்றம் உருவாக்கப்பட்டது” என்கிறார் கிளாஸ் கிரெய்சோவிச்.

ஹிட்லர் ஆட்சியில் கட்டவிழ்த்துவிடப்பட்ட அட்டூழியங்களுக்கு பொறுப்பான ஜெர்மானிய தலைவர்கள் 24 பேர் மீதான வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் சுமார் ஓராண்டு காலம் விசாரிக்கப்பட்டன. ஜெர்மனியில் பல படுகொலைகளுக்குக் காரணமான கெஸ்டபோ ரகசிய போலீசை நிறுவிய ஹெர்மான் கோயரின் உள்ளிட்ட 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

போர்க் காலத்தில் அட்டூழியங்களில் ஈடுபடுபவர்கள் யாரும் தேசபக்தி போர்வைக்குப் பின்னால் ஒளிந்து கொள்ள முடியாது, அவர்கள் சட்டத்தை எதிர்கொண்டே தீர வேண்டும் என்ற செய்தியை நியூரம்பர்க் விசாரணைகள் உலகிற்கு உரக்கக் கூறின.

*1949-ம் ஆண்டு* உலகின் அனைத்து நாடுகளும் ஜெனிவா மாநாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதனால், உலகில் போர்க்குற்றங்கள் முடிவுக்கு வந்துவிட்டதாக அர்த்தம் கொள்ள முடியாது.

### 1990-களின் யுத்தங்கள்

*1991- ஆண்டு* யூகோஸ்லாவியா கூட்டமைப்பில் இணைந்திருந்த நாடுகள் தங்களை சுதந்திர நாடுகளாக அறிவித்துக் கொண்டன. இதனால், அங்கே தொடங்கிய இனக்குழுக்கு இடையிலான மோதல் 2 ஆண்டுகள் வரை நீடித்தது. அப்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த ஐ.நா. பாதுகாப்பு அவை சார்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது.

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசுகளான செர்பியா, போஸ்னியா, குரோஷியா ஆகிய நாடுகள் அந்த குற்றவாளிகளை ஒப்படைத்தால் மட்டுமே அவர்கள் தண்டிக்கப்படுவது சாத்தியமாகும்.

இதில் உள்ள சிக்கல் தொடர்பாக, போலந்தில் உள்ள வார்சா பல்கலைக் கழக அரசியல் துறை பேராசிரியர் பேட்ரிசியா க்ருஸ்பெக்கிடம் விளக்கம் கேட்டபோது:

‘மேற்கூறிய நாடுகள் குற்றம்சாட்டப்பட்டவர்களை ஒப்படைக்கவும், அவர்களுக்கு எதிரான ஆதாரங்களை திரட்டவும் தயங்கின.



(09ஆம் பக்கம் பார்க்க)

ப.சிதம்பரம்

# சட்டம் தடுமாறலாம், இறுதியில் நீதியே வெல்லும்

சட்டப்படி நீதி வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டவை நீதிமன்றங்கள். சில வேளைகளில் நீதி வழங்கலில் தடுமாற்றங்கள் இருப்பதுபோலத் தெரியலாம், அடிக்கடி திருப்பங்களும் வளைவுகளும் கொண்ட வழக்குகளின் பாதையின் இறுதியில் நியாயம் வழங்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் நீதிமன்றங்களை நம்பியிருக்கலாம் வழக்காடிகள். இந்த முன்னுரையோடு, நாட்டின் கவனத்தை சமீபத்தில் ஈர்த்துள்ள வழக்கு பற்றியும், அது அரசியல் அரங்கின் இரு தரப்பையும் சேர்ந்த எதிரெதிர் முகாம்களில் ஏற்படுத்தியுள்ள கொந்தளிப்புகளையும் சற்றே விளக்குகிறேன்.

குஜராத் மாநிலத்தின் சூரத் நகரைச் சேர்ந்த மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அவதூறு வழக்கொன்றில் (இந்திய தண்டனையியல் சட்டம் 499இன் கீழ் தொடரப்பட்டது), காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் ராகுல் காந்திக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதித்து இந்த ஆண்டு மார்ச் 23இல் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பை வழங்கிய பிறகு, இந்தத் தீர்ப்பின்படி சிறையில் அடைக்கப்படுவதை உடனடியாக நிறுத்திவைத்து, பிணை விடுதலைக்கு விண்ணப்பிக்க அவகாசம் தந்து உத்தரவிட்டார் நீதிபதி. இருப்பினும் மார்ச் 24இல் ராகுலின் மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து 'தகுதி நீக்கம்' செய்யப்படுவதாக அறிவித்து, அவருடைய வயநாடு மக்களவைத் தொகுதி 'காலி' என்றும் அறிவிக்கப்பட்டது.



இந்த வழக்கின் பாதையைப் பார்ப்போம்:

***13.04.2019:*** கர்நாடக மாநிலத்தின் கோலாரில் நடந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பேசினார்.

***16.04.2019:*** பூர்ணேஷ் மோடி, எம்.எல்.ஏ. (பாஜக), "மோடி சமூகம் முழுவதையும் ராகுல் காந்தி தன்னுடைய பேச்சால் அவதூறு செய்துவிட்டார்" என்று குஜராத்தின் சூரத் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் புகார் தெரிவித்து வழக்கு தொடுத்தார்.

***07.03.2022:*** தான் தொடர்ந்த வழக்கை மேற்கொண்டு விசாரிக்க வேண்டாம் என்று கோரி, குஜராத் உயர் நீதிமன்றத்தில் மனு செய்து தடை ஆணையும் பெற்றார் மனுதாரரான பூர்ணேஷ் மோடி.

***07.02.2023:*** அதானி தொழில் குழுமங்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து மக்களவையில் பேசினார் ராகுல் காந்தி.

***16.02.2023:*** தான் தொடுத்த வழக்கை விசாரிக்க வேண்டாம் என்று அளித்த மனுவை குஜராத் உயர் நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்றார் பூர்ணேஷ் மோடி.

***21.02.2023:*** ராகுல் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்கில் விசாரணை தொடர்ந்தது.

***17.03.2023:*** விசாரணை முடிந்தது, தீர்ப்பு அறிவிக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டது.

***23.02.2023:*** ராகுல் காந்தி அவதூறு செய்துவிட்டார், சட்டப்படி அவருக்கு அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது என்று சூரத் மாஜிஸ்திரேட் தனது 168 பக்கத் தீர்ப்பில் அறிவித்தார். சிறிது நேரம் கழித்து, அவருடைய சிறைத் தண்டனையை ஒரு மாத காலத்துக்கு நிறுத்தி வைத்து அவரே உத்தரவிட்டார்.

***24.03.2023:*** ராகுல் காந்தியின் தகுதியிழப்பை, மக்களவைச் செயலகம் அறிவிக்கையாக வெளியிட்டது.

சாதாரணமான ஒரு வழக்கு, மூன்று ஆண்டுகளாக அங்கும் இங்கும் அலைந்து தாமதப்பட்டப் பிறகு, திடீரென வேகம் பெற்று, மின்னல் வேகத்தில் இறுதிக் கட்ட விசாரணை நடந்து - முப்பது நாள்களுக்குள் தண்டனையைப் பெற்றுத் தந்திருக்கிறது. இந்த வழக்கு விசாரணையில் ஏன் இப்படித் திடீர் அவசரம் காட்டப்பட்டது என்பது புதிராக இருக்கிறது. ●

# ரஷ்ய அதிபர் புடினை கைது செய்வது சாத்தியமா?...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாமல் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரிகளால் களத்தில் செயல்பட முடியாது. குற்றம்சாட்டப் பட்டவர்களை கைது செய்து நீதிமன்றத் தில் நிறுத்துவதோ, ஆதாரங்களை திரட்டுவதோ, பாதிக்கப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பெறுவதோ முடியாமல் போயிருக்கும்." என்று பேட்ரிசியா க்ருஸ்பெக் கூறினார்.

போர் முடிவுக்கு வந்த பிறகே சர்வதேச நீதிமன்றத்தில் இதுதொடர்பான பணிகளைத் தொடங்க முடிந்தது. முன்னாள் யூகோஸ்லாவியா மற்றும் செர்பியாவின் அப்போதைய அதிபராக இருந்த ஸ்லோபதான் மிலாசோவிச், போஸ்னியன்-செர்பியன் தலைவர்களான தடாவன் காரட்ஜிக், ரத்கோ மிலாடிஜிச் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

அது நீண்டதொரு நடைமுறையாக இருந்தது. சர்வதேச நீதிம்னறம் 20 ஆண்டுகளில் உலகளாவிய மனிதநேயச் சட்டங்களில் ஏராளமான மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. யூகோஸ்லாவியாவில் சண்டை நடந்து கொண்டிருந்த போது, 1994-ம் ஆண்டு ஆப்ரிக்காவின் ருவாண்டாவில் ஹூட்டு - டுட்சி இனக்குழுக்களுக்கு இடையே யார் அதிகாரம் செலுத்துவது என்பதில் மோதல் வெடித்தது.

1994-ம் ஆண்டு, வெறும் நூறே நாட்களில் 8 லட்சம் டுட்சி இனத்தவரை ஹூட்டு தீவிரவாதிகள் படுகொலை செய்தனர். அதற்கு சில மாதங்கள் கழித்து ருவாண்டா போர்க் குற்றங்களுக்காக ஐ.நா. பாதுகாப்பு அவை சார்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது.

1990-களில் ஐ.நா. பாதுகாப்பு அவையால் நிறுவப்பட்ட 2 சர்வதேச நீதிமன்றங்களும் யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டாவில் நடந்த போர்க் குற்றங்களுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டவை.

ஆனால், 1998-ம் ஆணடு ரோம் சட்டம் என்று அழைக்கப்படும் புதிய ஒப்பந்தத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டன.

அதன்படி, போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்க நிரந்தர சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது. சில முக்கிய நாடுகளைத் தவிர, பெரும்பாலான நாடுகள் இந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லையை ஏற்றுக் கொண்டன. இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார எல்லையை அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டன.

யுக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் தொடங்கிய ஓராண்டைக் கடந்துவிட்ட நிலையில், தொடக்கம் முதலே போர்க் குற்றங்கள் குறித்த புகார்கள் எழுந்து வருகின்றன.

அப்படியென்றால், ரஷ்ய அதிபர் புடின் மீது சர்வதேச நீதிமன்றம் இப்போது குற்றச்சாட்டுகளை பதிவு செய்து பிடிவாரண்ட் பிறப்பிப்பது ஏன்?

ஐரோப்பா மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் உதவி இயக்குநர் ரேச்சல் டென்பரிடம் இதுதொடர்பாக பேசியபோது:

"ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், ரஷ்யாவின் குழந்தைகள் நல ஆணைய தலைவர் மரியா லோவா-பெலோவா ஆகியோருக்கு எதிரான போர்க்குற்ற வழக்குகளில் பிடிவாரண்ட் பிறப்பிக்க போதிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக சர்வதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. உக்ரைனில் ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ள பிராந்தியங்களில் இருந்து உக்ரைனின் பிற பகுதிகளுக்கும், ரஷ்யாவுக்கும் குழந்தைகளை சட்டவிரோதமாக கொண்டு சென்றதாக அவர்கள் மீது குற்றம்சாட்டப்படுகிறது. அதனால்தான், அவர்களுக்கு எதிராக வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது." என்றார் அவர்.

அந்த ஆதாரங்கள் என்னென்ன என்ற விவரங்களை சர்வதேச நீதிமன்றம் வெளியிடவில்லை. ஆனால், போர்க்குற்றங்கள் தொடர்பாக ஏராளமான ஆதாரங்களைத் திரட்டி நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அவற்றில் பெரும்பாலானவை, நேரில் கண்ட சாட்சிகள் மொபைல் போன் அல்லது கேமராவில் பதிவு செய்த ஆதாரங்களை அந்த அமைப்புக்குக் கொடுத்தவையே.

"17 யுக்ரேனிய குழந்தைகளை சிகிச்சைக்காக மரியுபோல் நகரில் இருந்து அந்நாட்டின் பிற பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல முயன்ற யுக்ரேனியன் சமூக ஆர்வலர் ஒருவர் அளித்த ஆதாரங்களைத் திரட்டியுள்ளோம். அவரது முயற்சிக்கு ரஷ்ய அரசின் ஆதரவு பெற்ற ஆட்சியாளர்கள் தடை போட்டு விட்டனர். அதன் அதிகாரிகள் அவரை தடுத்து நிறுத்தி வேறொரு இடத்திற்கு அனுப்பி விட்டனர்." என்று பிபிசியிடம் ரேச்சல் டென்பர் கூறினார்.

இதுபோன்ற நிகழ்வுகள் நடந்ததாகக் கூறப்படுவதை ரஷ்யா மறுக்கவில்லை. ஆனால், யுக்ரேனிய குழந்தைகள் வேறிடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதை மனிதாபிமான நடவடிக்கை என்கிறது ரஷ்யா. மிகப்பெரிய அளவில் உக்ரேனிய குழந்தைகள் இடமாற்றம் செய்யப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

'ரஷ்யா என்ன சொன்னாலும், இந்த குழந்தைகளை எளிதில் தத்தெடுக்க வழிவகை செய்யும் வகையில் ரஷ்ய அரசு அண்மையில் சட்டங்களை திருத்தியுள்ளது. இதன் மூலம் அந்த குழந்தைகள் ரஷ்யக் குடிமக்கள் ஆகிவிடுவார்கள். ரஷ்யா என்ன காரணங்களை முன்வைத்தாலும், இது ஜெனிவா ஒப்பந்தங்களை மீறிய செயல்தான். போர்க்குற்றம் தான்" என்று ரேச்சல் திட்டவட்டமாக கூறுகிறார்.

சர்வதேச நீதிமன்றம் புதிய குற்றச்சாட்டுகளை விரைவில் பதிவு செய்யவும் வாய்ப்புள்ளது.

யுக்ரைன் மீதான தாக்குதலைத் தொடங்கிய பிறகு அங்கே ரஷ்யா ஆக்ரமித்துள்ள பகுதிகளுக்கு மட்டுமே புடின் இதுவரை பயணம் செய்துள்ளார். 1998-ம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால், அவரை கைது செய்யும் பொறுப்பு அந்நாட்டிற்கு உண்டு. ஆனால், இந்த அணுகுமுறை தோல்வியடைந்துள்ளது. அதன் பொருள், சர்வதேச நீதிமன்றத்தின் பிடிவாரண்ட் வெறும் அடையாள நடவடிக்கை மட்டுமே.

சர்வதேச நீதிமன்ற பிடிவாரண்டிற்குப் பிறகு, யுக்ரேன் போரைத் தொடர்வதில் புடின் இன்னும் உறுதி காட்டுவாரா என்ற கவலையும் இருக்கவே செய்கிறது. ●

# ட்ரம்ப் கைது: அமெரிக்க வரலாற்றில் கறுப்புப் பக்கங்களாக பதிவான 57 நிமிடங்கள்



## நீதிமன்றத்தில் நடந்தது என்ன?

ஆபாசப்பட நடிகையுடனான தொடர்பை மறைப்பதற்காக பணம் கொடுத்ததாக கூறப்படும் வழக்கில் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

நியூயார்க்கில் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் அமெரிக்க நேரப்படி நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு ட்ரம்ப் வந்து சேர்ந்தார்.

அமெரிக்க அதிபர்கள், முன்னாள் அதிபர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் ரகசியக் காவல் படையினர் புடைசூழ நீதிமன்றத்திற்கு வந்த ட்ரம்ப், வழக்கமான நீலநிற கோட்டும், சிவப்பு நிற டையும் அணிந்திருந்தார்.

நீதிமன்றத்திற்குள் நுழையும் போதே சற்று மந்தமாக காணப்பட்ட ட்ரம்ப், தனக்காக காத்துக் கொண்டிருந்த வழக்கறிஞர்களை நோக்கி மெதுவாக நடந்து சென்றார்.



அங்கே, ட்ரம்ப் செய்தியாளர்களை சந்திக்கவே இல்லை. அவரது உடல் மொழி மற்றும் முக பாவனைகள் பெரிய அளவில் எதையும் வெளிப்படுத்துவதாக இல்லை.

ட்ரம்ப் ஆஜராவதை செய்தியாக்குவதற்காக அங்கே கூடியிருந்த பத்திரிகையாளர்கள் மொபைல் போன் மற்றும் லேப் டாப்களை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படவில்லை.

நீதிபதி ஜூவான் மெர்ச்சான் வந்ததும் ட்ரம்ப் உள்பட அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். நீதிமன்றத்திற்கு வெளியே அரசியல் மற்றும் ஊடக வெளியில் மிகவும் பரபரப்பாக இந்த வழக்கு பேசப்பட்டாலும், வழக்கைக் கையாறும் நீதிபதி மெர்ச்சான் ஒருபோதும் குரலை உயர்த்தவே இல்லை. வெகு நிதானமாக வழக்கை கையாண்டார்.

வழக்கறிஞர்களுக்கான காலக்கெடு, அடுத்த விசாரணைக்கான தேதி நிர்ணயம் போன்ற வழக்கமான நீதிமன்ற நடைமுறைகளாகவே அது அமைந்தது.

அரசியல் அரங்கில் வெகு ஆடம்பரமாக, ஆரவாரிக்கக் கூடியவரான ட்ரம்ப் நீதிமன்றத்தில் ஒரு சில வார்த்தைகளையே உதிர்த்தார்.

ட்ரம்ப் மீதான 34 குற்றச்சாட்டுகளை நீதிபதி வாசிக்கையில் ட்ரம்ப், "நான் குற்றம் செய்யவில்லை" என்று மட்டுமே பதிலளித்தார்.

ஒரு கட்டத்தில் நீதிபதி மெர்ச்சான், வழக்கு தொடர்பான அனைத்து விசாரணைகளின் போதும் நீங்கள் நேரில் வர அனுமதி உண்டு என்பதை டிரம்பிடம் நினைவூட்டினார். நீங்கள் இதை புரிந்து கொண்டீர்களா என்று நீதிபதி கேட்க, ட்ரம்ப் "ஆம்" என்று ஒரே வார்த்தையில் பதிலுரைத்தார்.

நீதிமன்றத்திற்குள் கட்டுக்கடங்காமல் அல்லது விசாரணையை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டால், விசாரணையில் ஆஜராவதற்கான உரிமையை இழக்க நேரிடும் என்று நீதிபதி குறிப்பிட்டார்.

ட்ரம்ப் மிரட்டல் விடுக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பதிவிட்டார் என்று குற்றம்சாட்டிய அரசு தரப்பு வழக்கறிஞர், "என் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டால் உயிரிழப்பும் மற்றும் பேரழிவுமே மிஞ்சும்" என்று குறிப்பிட்டு அவர் பதிவிட்ட ஒரு சமூக ஊடகப் பதிவை சுட்டிக்காட்டினார்.

தன் மீதான குற்றச்சாட்டுகள் ஒரு மிகப்பெரிய அநீதி என்று நம்பும் ட்ரம்ப், மனம் நொந்துபோய் அவ்வாறு நடந்து கொண்டிருக்கலாம் என்று ட்ரம்ப் தரப்பு வழக்கறிஞர்கள் பதிலளித்தனர்.

மிகவும் மோசமான சொல்லாடல்களையும், வார்த்தை பிரயோகங்களையும் விரக்தியில் செய்து விட்டார் என்று நியாயப்படுத்தும் உங்களை வாதங்களை ஏற்க முடியாது என்று நீதிபதி மெர்ச்சான் கூறினார்.

அவதூறு பேச்சு கூடாது என்ற எனது முந்தைய எச்சரிக்கை ஒரு வேண்டுகோள்தான், உத்தரவு இல்லை என்று குறிப்பிட்ட நீதிபதி, இந்த விவகாரம் மீண்டும் எழுந்தால் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படும் என்று எச்சரித்தார்.

ட்ரம்ப் மீதான வழக்கின் நீதிமன்ற நடைமுறைகள் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தன.

ட்ரம்ப் தனது இருக்கையில் இருந்து எழுந்ததுமே ரகசிய காவல் படையினர் அவரை சூழ்ந்து கொண்டனர். ட்ரம்ப் தனது வழக்கறிஞர்களிடம் சன்னமான குரலில் மெதுவாக பேசினார். இதனால், சற்று தொலைவில் அமர்ந்திருந்த பத்திரிகையாளர்களால் அவர் என்ன பேசினார் என்பதை கேட்க முடியவில்லை.

நீதிமன்றத்தின் மையத்தில் இருந்த நடைபாதை வழியே நடந்து சென்று பின்வாசல் வழியே ட்ரம்ப் வெளியேறினார். வெளியே நின்றிருந்த ஊடகத்தினரிடம் அவர் எதையும் பேசவில்லை. அவர் மிகவும் இறுக்கமாக காணப்பட்டார்.

அமெரிக்க அதிபர்களாக பதவி வகித்தவர்களில் குற்றவியல் வழக்குகளை எதிர்கொண்ட முதல் நபர் டொனால்டு ட்ரம்ப்தான். அந்த வகையில், நீதிமன்றத்தில் ட்ரம்ப் ஆஜரான அந்த 57 நிமிடங்களும் அமெரிக்க அரசியல் வரலாற்றில், கருப்புப் பக்கங்களாக பதிவாகியுள்ளன.






# குச்சவெளியில் புத்தர் சிலை வைக்க முயன்ற பிக்குவினால் இன முறுகல்!

## பாராளுமன்றில் இம்ரான் எம்.பி ஆவேசம்



திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட் பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் புத்தர்சிலையொன்றை வைக்க முற்படும்போது, அப்பிரதேச மக்கள் ஒன்றிணைந்து அதனைத் தடுக்க முனைந்தனர். அவ்வாறு முன்வந்த பொதுமக்களுக்கு

**கொழும்பு, ஏப். 06**
**புத்த பிக்கு ஒருவர் அரிசிமலை, பொன்பரப்பிமலை போன்ற பிரதேசங்களில் புத்தர் சிலையொன்றை வைக்க முற்பட்டதால், அங்கு பாரிய இன முறுகல் ஏற்பட்டதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நேற்று முன் தினம் சபையில் தெரிவித்தார்.**

பிஸ்டலை காண்பித்து அச்சுறுத்தல் விடுத்ததால் அங்கு பாரிய இனமுருகல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தொல்பொருள் திணைக்களத்தின் விசேட வர்த்தமானி அறிவித்தல்கள், மக்களின் பாரம்பரிய வசிப்பிடம் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படாமலேயே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகளோடு புத்த பிக்குகளும் செல்கிறார்கள்-என்றார்.

இது தொடர்பாக, தனக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்றும் அதனை ஆராய்ந்து விளக்கத்தை தருவதாகவும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பதிலளித்தார். (அ)

# சித்தி விநாயகர் ஆலய பாற்குடபவனி



மட்டக்களப்பு, ஏப். 06
மட்டக்களப்பு-விளாவட்டவான் அருள்மிகு சிறி சித்தி விநாயகர் ஆலய பாற்குடபவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த ஆலயத்தின் ஆலய மஹா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேக பூசை இடம்பெற்று நேற்று முன்தினம் காலை பாற்குடபவனியும், சங்காபிஷேகமும் இடம்பெற்றது.

காலை சொறுவாமுனை அருள்மிகு சிறி சிவமுத்து மாரியம்மன் ஆலயத்தில் இருந்து விசேட பூசைகளுடன் ஆரம்பமான பாற்குடப்பவனி பிரதான வீதியின் ஊடாக அரோகோரா கோசத்துடன் அடியார்கள் தமது சிரசில் பாற்குடங்களை சுமந்துவந்து மூலவர் மூர்த்தியான சித்தி விநாயக பொருமானுக்கும் ஏனைய தொய்வங்களுக்கும் பாலாபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து விசேட பூசைகளும் இடம்பெற்றிருந்தன. (அ)

# திருக்கோணேஸ்வரர் ஆலய பிரம்மோற்சவம்

திருமலை, ஏப். 06
திருக்கோணேஸ்வரப் பெருமானின் பிரம்மோற்சவம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்தோற்சவமும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 06.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 05.30 மணிக்கு தெப்ப உற்சவமும் நடைபெறவுள்ளது..

மஹோற்சவ காலங்களில் அபிஷேகம் காலை 08:00 மணி, மாலை 03.30 மணிக்கும் நடைபெறும்.

பூசை காலை 09:00 மணிக்கும் மாலை 04.30 மணிக்கும் கொடித்தம்ப பூசை காலை 10:00 மணிக்கும் மாலை 05:00 மணிக்கும் வசந்த மண்டப பூசை காலை 11:00 மணிக்கும் மாலை 06:00 மணிக்கும் நடைபெறும். (அ)

# வைத்தியர்களுக்கான பயிற்சி செயலமர்வு





அம்பாறை, ஏப். 06
கொழும்பு சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வு தம்பலகாமம் -முள்ளிப்பொத்தானை பிரதேச சபைக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

கொழும்பு சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி.தயாநந்தன் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.சிறிதர், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி.சிவகுமார் உள்ளிட்ட வைத்தியர்களும், திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி.தயாநந்தன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.சிறிதர் மற்றும் வைத்தியர் சி.சிவகுமார் ஆகியோர் பாரம்பரிய வைத்திய முறை கள் பற்றி எடுத்துரைத்தனர்.

இதில் திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்களின் அறிவுத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வைத்திய முறைகளை எவ்வாறு கடைப்பிடித்துச் செல்லவேண்டும் என்ற விளக்கங்களும் வழங்கப்பட்டன. (அ)

# 85 வறிய விவசாய குடும்பங்களுக்கு நிந்தவூரில் உலருணவுப் பொதிகள்

நிந்தவூர், ஏப். 06
புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 85 வறிய விவசாயக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புனித ரமழான் நோன்பு காலத்தை முன்னிலைப்படுத்தியும், பொருளாதார மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வினால் வறிய விவசாயக்குடும்பங்கள் எதிர் நோக்கும் கஷ்ட நிலமைகளைக் கவனத்திற்கொண்டும், நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையம் ஊடாக இந்த உதவி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான அம்பாறை மாவட்ட சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ.ஹார்லிக்கின் எண்ணக் கருவிலும், பெரு முயற்சியிலும் இந்த உதவி செயற்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன் பயனாக தனவந்தர்கள், கொடையாளிகளின் நிதி உதவியுடன் குறித்த வறிய விவசாயக் குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ. ஹார்லிக் தலைமையில் நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸ், அம்பாறை மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் சாமினி சோமதாஸ ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டதுடன், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சஞ்சீவ பிரசன்ன, நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதே வேளை இந்த புனித ரமழான் மாதத்தின் முக்கியத்துவம் உணர்ந்தும், வறிய விவசாயக்குடும்பங்களைக் கவனத்திற் கொண்டும் சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹார்லிக் முன்னெடுத்த மேற்படி உதவிச் செயற்திட்டத்தை நிகழ்வில் உரையாற்றிய முக்கிய அதிதிகள் பாராட்டினர்.

நிகழ்வின் இறுதியில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வும் இடம்பெற்றது. (அ-06)

# நிந்தவூர் விவசாயிகளுக்கு இலவச உரம் விநியோகம்

நிந்தவூர், ஏப். 06
அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் சிறுபோக நெற் செய்கைக்கான, அரசின் இலவச அடிக்கப்பட்டு உர (ரி.எஸ்.பி) விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்டத்தின் முக்கிய விவசாயப்பிரிவான நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையப் பிரிவில், சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள விருக்கும் விவசாசிகளுக்கு கடந்த திங்கட்கிழமை முதல் இந்த இலவச அடிக்கட்டு உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.ஏ.ஹார்லிக்கின் சீரான நெறிப்படுத்தலில் மூன்று முக்கிய மத்திய களஞ்சியங்களுடாக இந்த உரவிநியோகம் இடம்பெற்று வருகின்றது

இதற்கமைவாக நிந்தவூர் கமநல சேவைகள் மத்திய நிலையப் பிரிவில் 2538.35 ஹெக்ரேயர் சிறுபோக நெற்செய்கைகென ஒரு இலட்சத்து 37933.53 கிலோ கிராம் அடிக்கட்டு (ரி.எஸ்.பி) உரம் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட விருக்கின்றது.

கடந்த காலங்களில் போதிய உரமின்மையால் பெரும் சலிப்படைந்திருந்த விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள மேற்படி இலவச உரவிநியோக ஆரம்ப நிகழ்வுகள் நிந்தவூரில் சிறப்பாக நடைபெற்றன.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹார்லிக் தலைமையல் நடைபெற்ற குறித்த ஆரம்ப நிகழ்வுகளில், அம்பாறை மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் திருமதி சாமினி சோமதாஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், இலவச உர விநியோகத்தையும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச விவசாயிகளுக்கான இந்த இலவச உர விநியோக தர்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹார்லிக் தெரிவித்தார்.

தவிரவும் சர்வதே அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் (யு.எஸ் எய்ட்) நிதி உதவியுடன் 36000 மெற்றிக் தொன்ரி.எஸ்பி உரம் இலங்கைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

இலங்கையின் 25 மாவட்டங்களிலுமுள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான நெல் விவசாயிகளுக்கு இலவசமாக இந்த உரம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-06)

### டொனால்ட் ட்ரம்ப் மீது 34 குற்றச்சாட்டுக்கள்!

# மற்றோர் அழகிக்கு பணம் வழங்கியதும் அம்பலமானது



நியூயோர்க், ஏப். 06

**அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது 34 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 76 வயதான ட்ரம்ப் அவற்றை மறுத்துள்ளார். தன் மீது அரசியல் ரீதியாக தாக்குதல் நடத்தப்படுவதாக ஆதரவாளர்கள் மத்தியில் கூறினார்.**

தமக்கிடையிலான உறவை பகிரங்கப்படுத்தாமலிருக்க ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸூக்குப் பணம் கொடுத்தமை தொடர்பில் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டன.

அவர் வர்த்தகப் பதிவுகளில் மோசடி செய்ததாகவும் அவற்றில் சிலவற்றை வரி தொடர்பில் தவறாகச் சித்திரித்ததாகவும் குற்றச்சாட்டு கூறுகிறது.

நியூயோர்க் நகரில் அவை கடுமையான குற்றச்சாட்டுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

நேற்று முன் தினம் மன்ஹற்றனில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜராக வந்த ட்ரம்ப், பொலிசாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் மீது 34 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

முன்னதாக ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு 130,000 டொலர் வழங்கியதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. குற்றப்பத்திரத்தில், மற்றொரு அழகிக்கு பணம் வழங்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிளேபோய் மொடல் அழகி கரேன் மெக்டௌகல் என்பவருக்கு 150,000 டொலர் செலுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எந்தவித முன் விசாரணை கட்டுப்பாடுகளும் இல்லாமல் காவலில் இருந்து செவ்வாய்க்கிழமை விடுவிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கலாம் என்று நீதிபதி கூறினார்.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டிகளும் அப்போதுதான் தொடங்கியிருக்கும் நியூயோர்க் நகர நீதிமன்றத்திற்கு வந்திருந்த ட்ரம்ப் குற்றச்சாட்டுகளை அமைதியாகக் கேட்டார்.

அவர் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுத்த பின்பு எந்த நிபந்தனைகளும் இல்லாமல் விடுவிக்கப்பட்டார்.

ட்ரம்பின் வழக்கறிஞர்கள் அந்தக் குற்றச்சாட்டுகள் ஏமாற்றம் தருவதாகக் கூறினர்.

கடுமையான போராட்டத்துக்குத் தயார் என்றும் அவர்கள் அறிவித்தனர்.

நீதிமன்றத்திலிருந்து வெளியேறிய பின் ஊடகங்களிடம் பேசிய ட்ரம்ப், ஜோ பிடன் நிர்வாகத்தை கடுமையாக தாக்கி, அமெரிக்கா நரகத்திற்கு போகிறது என்றும், உலகம் ஏற்கனவே பல காரணங்களுக்காக நாட்டைப் பார்த்து சிரிக்கிறது என்றும் கூறினார்.

“எங்கள் தேசத்தை அழிக்க முற்படுபவர்களிடம் இருந்து அச்சமின்றி பாதுகாப்பதுதான் நான் செய்த ஒரே குற்றம்” என்று டொனால்ட் ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார்.

“அமெரிக்காவில் இது நடக்கும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை,” என்று டிரம்ப் தனக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகளில் கூறினார்.

# சென்.பீற்றர்ஸ்பேர்க் குண்டுவெடிப்பு; சந்தேகநபரை கண்டுபிடித்த ரஷ்யா!



மொஸ்கோ, ஏப். 06

சென்.பீற்றர்ஸ்பேர்க் ஹோட்டலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய, ஒரு பெண்ணை ரஷ்ய புலனாய்வாளர்கள் தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 வயதான தர்யா ட்ரெபோவா என்ற பெண், உக்ரைன் போருக்கு ஆதரவான பதிவர் விளாட்லென் டாடர்ஸ்கிக்கு ஒரு சிலையை ஒப்படைத்ததை ஒப்புக்கொண்டார்.

சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொளியில் பழுப்பு நிற கோட் அணிந்த இளம் பெண் ஒருவர் அட்டைப் பெட்டியுடன் ஹோட்டலுக்குள் நுழைவதைக் காட்டியது. ஆனால், இந்த பொருள் வெடிக்கும் என்பது தனக்கு தெரியாது என கூறியுள்ளார்.

இதனிடையே, உக்ரைனில் இருந்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், இது ரஷ்ய உள்நாட்டு சண்டையின் ஒரு வழக்கு என்று உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

40 வயதான டாடர்ஸ்கி (உண்மையான பெயர் மாக்சிம் போமின்), கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு விருந்தினர் பேச்சாளராக ஹோட்டலில் ஆதரவாளர்களுடன் ஒரு தேசபக்திக் கூட்டத்தில் கலந்து கொண்டபோது நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் உயிரிழந்தார். மேலும், இதன்போது, 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (அ)

# நேட்டோவில் இணைந்தது பின்லாந்து

ஹெல்சிங்கி, ஏப். 06

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் உருவான ஒரு வரலாற்று மாற்றத்தில் பின்லாந்து நேட்டோவில் இணைந்துள்ளது.

கடந்த செவ்வாயன்று பிரஸ்ஸல்ஸில் உள்ள நேட்டோ தலைமையகத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி பிளிங்கனிடம் அதிகாரபூர்வ ஆவணத்தை ஒப்படைத்து பின்லாந்து வெளியுறவு அமைச்சர் பெக்கா ஹாவிஸ்டோ, இணைவு செயல்முறையை நிறைவு செய்தார்.

நேட்டோவில் பின்லாந்தின் உறுப்புரிமை யாருக்கும் எதிரானது அல்ல என்று ஜனாதிபதி அலுவலகம் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

“பின்லாந்தின் உறுப்புரிமை யாரையும் குறிவைக்கவில்லை. அது பின்லாந்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கையின் அடித்தளங்கள் அல்லது நோக்கங்களை மாற்றாது. பின்லாந்து ஒரு நிலையான மற்றும் யூகிக்கக்கூடிய நோர்டிக் நாடு, இது சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்க்க முயல்கிறது” என்று அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

செவ்வாயன்று நேட்டோவில் பின்லாந்தின் உத்தியோகபூர்வ இணைவை அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் அன்ரனி பிளிங்கன் வரவேற்றார்.

“பின்லாந்து இந்த கூட்டணியில் 31ஆவது உறுப்பினராக இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எனவே இது ஒரு முக்கியமான நாள், ஏற்கனவே நேட்டோவின் வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்.

பின்லாந்து நேட்டோவில் நுழைவதில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு நேட்டோ நன்றி சொல்லக்கூடிய ஒரே ஒரு விடயமாக உள்ளது” என்றார்.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டணியின் தலைவரான ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், “பின்லாந்தின் பாதுகாப்புக்கும், நோர்டிக் பாதுகாப்புக்கும் மற்றும் ஒட்டுமொத்த நேட்டோவிற்கும் ஒரு நல்ல நாள்” என்று பாராட்டினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து வடக்கு ஐரோப்பாவில் ரஷ்ய ஆக்கிரமிப்பு பற்றிய அச்சம் அதிகரித்ததால், ஸ்வீடனுடன் சேர்ந்து, ஒரு வருடத்திற்கு முன்பு நேட்டோ உறுப்பினர் பதவிக்கு பின்லாந்து விண்ணப்பித்தது.

ஆனால் இப்போது 31 உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் சேர ஸ்வீடன் இன்னும் காத்திருக்கிறது.

ரஷ்யாவுடனான பின்லாந்தின் எல்லை 1,300 கிமீ (800 மைல்கள்) முழுவதும் நீண்டுள்ளது.

ரஷ்யா நேட்டோ விரிவாக்கத்தை அதன் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகக் காட்டுகிறது மற்றும் அதன் மேற்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களில் அதன் இராணுவ திறனை அதிகரிப்பதன் மூலம் பின்லாந்துக்கு பதிலளிப்பதாகக் கூறியுள்ளது. (அ)

# உக்ரைனின் சில பிரதேசங்களை கைப்பற்ற போலந்து விரும்புகிறது!

மொஸ்கோ, ஏப். 06

போலந்து உக்ரைனின் சில பகுதிகளை கைப்பற்ற விரும்புகிறது என ரஷ்யாவின் எஸ்.வி.ஆர் வெளிநாட்டு உளவுத்துறையின் தலைவர் செர்ஜி நரிஷ்கின் தெரிவித்துள்ளார்.

மேற்கு உக்ரைனின் சில பகுதிகளை போலந்து கைப்பற்ற விரும்புவதாகவும், மொஸ்கோவுடன் இராணுவ மோதலில் ஈடுபட ஜோர்ஜியாவை மேற்கு நாடுகள் ஊக்குவிப்பதாகவும் செர்ஜி நரிஷ்கினை மேற்கோளிட்டு ரஷ்ய அரசு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

“முன்னாள் கிழக்கு கிரெஸ்கள் ஜஎல்லைகள்ஸ என்று அழைக்கப்படும் நவீன உக்ரைனின் மேற்குப் பகுதிகளின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவது போலந்து தேசியவாதிகளின் ஏக்கக் கனவாகும். இது தேசிய சித்தாந்தத்தின் ஒரு அங்கமாக மாறுகிறது, எனவே போலந்து தலைமை இந்த யோசனையை மறுக்க முடியாது, ”என்று நரிஸ்கின் கூறினார். (அ)

# நிலவுக்கு செல்லும் வீரர்களின் பட்டியலை வெளியிட்டது நாசா



நியூயோர்க், ஏப். 06

நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் ஆர்ட்டெமிஸ் 2 திட்டத்திற்கான விண்வெளி வீரர்களின் பெயர்ப் பட்டியலை நாசா வெளியிட்டுள்ளது.

நிலவுக்கு மனிதர்களை மீண்டும் அனுப்பும் முயற்சியில் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா ஈடுபட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு ஆர்ட்டெமிஸ் என்றும் நாசா பெயர் சூட்டியுள்ளது. கடந்த 1969 ஆம் ஆண்டளவில் அப்போலோ 11 மூலம் நிலவுக்கு மனிதர்களை நாசா அனுப்பியது. அதற்கு பிறகு இப்போது மீண்டும் முயற்சியை முன்னெடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக கடந்த 2022 நவம்பரில் ஆர்ட்டெமிஸ் 1 திட்டத்தின் சோதனை வெள்ளோட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டது.

நிலவுக்கு பின்பக்கத்தில் ஓரியான் எனும் கப்ஸ்யூல் அனுப்பப்பட்டது. அது வெற்றி பெற்றது.

இந்நிலையில் நாசாவும், கனடா நாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான சி.எஸ்.ஏயும் இணைந்து ஆர்ட்டெமிஸ் 11 திட்டத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வரிசையில் இந்த திட்டத்திற்கான விண்வெளி வீரர்கள் குழுவை அறிவித்துள்ளது.

இக்குழுவில் நாசா வீரர்கள் ரீட் வைஸ்மேன், விக்டர் குளோவர், கிறிஸ்டினா ஹாமக் கோச், கனடா விண்வெளி ஆராய்ச்சி நிறுவன வீரர் ஜெரமி ஹான்சென் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நிலவுக்குச் செல்லும் வீரர்கள் குழுவில் கனடா விண்வெளி வீரர் முதன்முறையாக இடம் பெற்றுள்ளார். ஒரு கறுப்பின வம்சாவளி வீரரும் உள்ளார். (அ)

# இலங்கைக்கு எதிரான ரி-20; நியூசிலாந்து இலகு வெற்றி!

வெலிங்டன், ஏப். 06

இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை டெஸ்ட், ஒரு நாள், இருபது - 20 தொடர்களில் விளையாடி வருகிறது. டெஸ்ட், ஒருநாள் தொடர்களை இலங்கை இழந்த நிலையில் தற்போது இருபது -20 தொடரில் விளையாடி வருகின்றது.

முதல் போட்டியில் சுப்பர் ஓவரில் இலங்கை வென்ற நிலையில், இரண்டாவது போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.

குசல் மெண்டிஸ் (9), பதும் நிஸங்க (10) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். (29 - 2 விக்.) தொடர்ந்து குசல் பெரேராவும் தனஞ்சய டீ சில்வாவும் 3ஆவது விக்கெட்டுக்காக 62 ஓட்டங்களை பகிர்ந்து அணியை பலப்படுத்த முயற்சித்தனர்.

ஆனால், குசல் பெரேரா (35), தனஞ்சய டீ சில்வா (37) ஆகிய இருவரும் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர். தொடர்ந்து விக்கெட்கள் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டன.

ஏனையவர்களில் சரித் அசலங்க (24) மாத்திரமே ஓரளவுக்கு சிறப்பாக செயல்பட்டிருந்தார். மற்றவர்கள் இரு இலக்க வரிசை ஓட்டங்களை எட்டவில்லை.

நியூசிலாந்து பந்துவீச்சில் அடம் மில்னே 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், பென் லிஸ்டர் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

142 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கி அதிரடியா துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 14.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து, 146 ஓட்டங்களைக் குவித்து இலகுவாக வெற்றியீட்டியது.



செட் போவ்ஸ், ரிம் சீபேர்ட் ஆகிய இருவரும் 20 பந்துகளில் 40 ஓட்டங்களை பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

செட் போவ்ஸ் 7 பௌண்ட்ரிகளுடன் 31 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரிம் சீபேர்ட், அணித் தலைவர் டொம் லெதம் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 2ஆவது விக்கெட்டில் 68 பந்துகளில் 106 ஓட்டங்களைப் பகிர்ந்து நியூசிலாந்துக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தனர்.

ரிம் சீபேர்ட் 43 பந்துகளில் 6 சிக்ஸ்கள், 3 பௌண்ட்ரிகள் உட்பட 79 ஓட்டங்களுடனும் ரொம் லெதம் 20 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

கசூன் ராஜித 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக அடம் மில்னே தெரிவானார். (ஐ)



## ஐ. பி. எல். இருபது - 20: இரண்டாவது வெற்றியை ருசித்தது குஜராத் அணி!

புதுடில்லி, ஏப். 06

டில்லி கப்பிடல்ஸ் அணிக்கு எதிரான ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

16ஆவது ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் அணியும், டில்லி கப்பிடல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். இதன்படி துடுப்பெடுத்தாடிய டில்லி அணிக்கு அந்த அணியின் தலைவர் டேவிட் வோர்ணர் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

சர்ப்ராஸ் கான் 30 ஓட்டங்களும் அபிஷேக் பொரெல் 20 ஓட்டங்களும் எடுத்தனர். இறுதிக்கட்டத்தில் அக்சர் பட்டேல் பொறுப்புடன் ஆடி 36 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மற்றவர்கள் யாரும் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால், டில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது.

குஜராத் சார்பில் ஷமி, ரஷீத் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்களும், அல்ஜாரி ஜோசப் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை.

தலா 14 ஓட்டங்கள் எடுத்திருந்த தொடக்க வீரர்களான ஷுப்மன் கில் மற்றும் சஹா இருவரையும் நார்ஜே "கிளீன் போல்ட்" ஆக்கி வெளியேற்றினார். இதன்பின் 5 ஓட்டங்கள் எடுத்திருந்த ஹார்திக் பாண்ட்யாவை கலீல் அகமது ஆட்டமிழக்க செய்தார். என்றாலும், மறுமுனையில் இருந்த சாய் சுதர்சன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவருக்கு பக்கபலமாக விஜய் சங்கர் மற்றும் டேவிட் மில்லர் இருந்தனர். விஜய் சங்கர் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மில்லர் 31 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை விளையாடினார்.

இதேபோல், சாய் சுதர்சன் 62 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

18.1 ஓவர்களில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது. நடப்பு தொடரில் குஜராத் அணி பெறும் இரண்டாவது வெற்றி இதுவாகும்.




## ஆடவர் கிரிக்கெட் போட்டியில் முதல் பெண் நடுவரான கிம்!

துனெடின், ஏப். 06

சர்வதேச கிரிக்கெட் சபையின் முழு உறுப்பினராக உள்ள ஆடவர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான சர்வதேச இருபது - 20 போட்டியில் முதல் பெண் கள நடுவராக செயல்பட்டுள்ளார் கிம் காட்டன்.

நேற்று நடைபெற்ற இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இருபது - 20 போட்டியில்தான் கள நடுவராக அவர் செயல்பட்டுள்ளார்.

48 வயதான அவர் கடந்த 2018 முதல் 54 மகளிர் இருபது - 20 மற்றும் 24 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக பணியாற்றியுள்ளார். நியூசிலாந்து நாட்டை சேர்ந்த இவர், கடந்த 2020இல் இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஹமில்டன் போட்டியில் மூன்றாவது நடுவராக செயல்பட்டிருந்தார் அவர். இதுதான் ஆடவர் கிரிக்கெட்டில் அவர் நடுவராக செயல்பட்ட முதல் போட்டி.

2018 முதல் மூன்று இருபது - 20 உலகக் கிண்ணம் மற்றும் ஒரு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் நடுவராக செயல்பட்டுள்ளார். இதில் 2020, 2022 மற்றும் 2023 இறுதிப் போட்டிகளும் அடங்கும். (ஐ)

## பிரெஞ்சு, விம்பிள்டனை தவறவிடுகிறார் முகுருஜா!

மட்ரிட், ஏப். 06

ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா மேலும் சில மாதங்கள் ரென்னிஸ் தொடரிலிருந்து ஒதுங்கி இருக்க முடிவு செய்துள்ளார்.

முன்னாள் முதல் நிலை வீராங்கனையான கார்பின் முகுருஜா கடந்த ஜனவரி 30ஆம் திகதிக்கு பிறகு எந்த போட்டியிலும் விளையாடவில்லை. இந்த ஆண்டில் இதுவரை ஆடிய 4 போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்து இருக்கிறார். இதனால் தரவரிசையில் 132 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இந்த நிலையில் 29 வயதான முகுருஜா மேலும் சில மாதங்கள் ரென்னிஸில் இருந்து ஒதுங்கி இருக்க முடிவு செய்துள்ளார்.

"குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நேரத்தை செலவிடுவது அற்புதமானது. இந்த ஓய்வு உடல் ஆரோக்கியத்துக்கும், புத்துணர்ச்சிக்கும் உதவுகிறது. இன்னும் சில காலம் அதாவது அடுத்து வரும் களிமண் மற்றும் புல்தரை தொடர் முடியும் வரை இந்த ஓய்வை தொடர முடிவு செய்துள்ளேன்" என்று தனது சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் மே 28ஆம் திகதி பாரிஸில் தொடங்கும் பிரெஞ்சு ஓப்பன் மற்றும் ஜூலையில் நடைபெறும் விம்பிள்டன் ஆகிய இரண்டு கிராண்ட்ஸ்லாம் தொடர்களையும் அவர் தவறவிடுகிறார்.

முகுருஜா 2016ஆம் ஆண்டில் பிரெஞ்சு ஓப்பனையும், 2017ஆம் ஆண்டில் விம்பிள்டன் பட்டத்தையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## வில்லியம்சனுக்கு பதிலாக குஜராத் அணியில் தசூன்!

அஹமதாபாத், ஏப். 06

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் குஜராத் ரைட்டன்ஸ் அணி இலங்கையின் இருபது - 20 அணித் தலைவர் தசூன் சானகவை இணைத்துள்ளது.

சென்னை அணிக்கு எதிரான போட்டியின்போது குஜராத் அணியின் கேன் வில்லியம்சன் முழங்காலில் காயமடைந்தார். இதனால், அவர் அணியை விட்டு விலக வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இந்த நிலையில் அவருக்கு பதிலாக இலங்கையின் தசூன் சானகவை குஜராத் அணி உள்வாங்கியுள்ளது.

சகலதுறை வீரரான தசூன் சானக 181 சர்வதேச இருபது -20 போட்டிகளில் 3,702 ஓட்டங்களை குவித்துள்ளார். அத்துடன், 59 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். அவரின் துடுப்பாட்ட சராசரி 141.94 ஆகும். (ஐ)

## வெடுக்குநாறிமலை விடயம்
# சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார்

கொழும்பு, ஏப். 06

**“வவுனியா, நெடுங்கேணி-வெடுக்குநாறிமலை பிரச்னை தொடர்பில் தமிழ், சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி பேச்சு நடத்துவார்.” - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

“அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோர் அமைச்சரவையில் கருத்துகளை முன்வைத்தனர். தமிழ், சிங்கள புத்தாண்டு முடிவடைந்த பின்னர் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்தப்படும்



என ஜனாதிபதி கூறினார். இவ்விவகாரம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கும் உள்ளது என்ற விடயமும் குறிப்பிடப்பட்டது.”- என்றார். (அ)

# பேக்கரி பொருட்களின் விலை குறைக்கப்படா!

கொழும்பு, ஏப். 06

சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி பொருட்களின் விலைகளை குறைக்கப் போவதில்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும், கிட்டத்தட்ட 75 வீதமான பேக்கரிகள் டீசல், விறகு அல்லது மின்சாரத்தை பயன்படுத்தியே இயங்குவதாக அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது செயற்பாட்டில் உள்ள 7,000 பேக்கரிகளில் 2,000 மட்டுமே எரிவாயுவைப் பயன்படுத்துகின்றன என இலங்கை



பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கோதுமை மா, நல்லெண்ணெய் மற்றும் முட்டையின் விலை குறையும் பட்சத்தில், பேக்கரி பொருட்களின் விலையை குறைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என அவர் கூறினார். (அ)

# 3 மாதங்களில் தனியாள் முற்பண வருமான வரியாக ரூ.25 பில்லியன்

கொழும்பு, ஏப். 06

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தனியாள் முற்பண வருமான வரியாக 25 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை அரசாங்கம் ஈட்டியுள்ளது.

ஜனவரி முதல் மார்ச் வரை தனியாள் முற்பண வருமான வரியில் 25,577 மில்லியன் வசூலித்ததாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 3,106 மில்லியனும், பெப்ரவரியில் 10,540 மில்லியனும், மார்ச் மாதத்தில் 11,931 மில்லியனும் வரியாக வசூலித்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# பயறு மற்றும் சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய கோரிக்கை

கொழும்பு, ஏப். 06

இறக்குமதி தடையை நீக்கி பயறு மற்றும் சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு அத்தியாவசிய உணவு இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த பொருட்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு சுங்க வரி விதிக்கவேண்டும் அல்லது உரிய அனுமதி வழங்க வேண்டும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

ரூபாயின் வலுவினால் பொருட்களின் விலைகள் 10% முதல் 12% வரை குறைந்துள்ளதாகவும் நிஹால் செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார். (அ)

# மோ.சைக்கிளில் அமர்ந்திருந்த யுவதி பஸ் மோதி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 06

கொழும்பு-கண்டி நெடுஞ்சாலையில் பட்டாலிய கஜூபுர என்ற இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது பஸ் மோதியதில் மோட்டார் சைக்கிளில் உட்கார்ந்திருந்த 22 வயதுடைய யுவதி ஒருவர் உயிரிழந்தார் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

விதானகே திமுத்து ரசாஞ்சலி என்ற தனியார் நிறுவனம் ஒன்றின் காசாளர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதி தனது காதலனுடன் உடுவாக நீர்வீழ்ச்சியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது பழம் வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

யுவதி மோட்டார் சைக்கிளின் ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது, அவரது காதலன் பழம் வாங்கச் சென்றார் எனவும், அப்போது கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ், மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் யுவதி படுகாயமடைந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வத்துபிட்டியால வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

பஸ் மோதியதில் பழ விற்பனை நிலையம் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வடக்கு-கிழக்கு காணி அபகரிப்பு பற்றி தெரியாதென ஜனாதிபதி கூறமுடியாது

## சபையில் குறிப்பிட்டார் சார்ள்ஸ்

கொழும்பு, ஏப். 06

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் காணி அபகரிப்பு நடவடிக்கை தனக்கு தெரியாது என ஜனாதிபதி குறிப்பிட முடியாது எனத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர், தமிழர்களின் பூர்வீக நிலங்களைச் சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி செயலகத்



தில் சேவையாற்றும் கீர்த்தி தென்னக்கோனே முன்னெடுத்துள்ளார்.

ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடி இந்த பிரச்னைக்கு விரைவான தீர்வு காண ஜனாதிபதி பொறுப்புடன் செயற்படவேண்டும்.

ஆட்சியாளர்கள் எடுத்த தவறான பொருளாதார கொள்கையினால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது.

இராமேஸ்வரம்-காங்கேசன்துறை கப்பல்சேவையை ஆரம்பித்தால் பல செலவுகளை குறைத்துக் கொள்ள முடியும்-என்றார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 06

வெள்ளவாய - தனமல்வில வீதியின் நுகயாய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு கப் வாகனம் மற்றும் ஓட்டோ ஆகியன நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 44 வயதான பொலிஸ் கான்ஸ்டபிள், 42 வயதான அவரின் மனைவி மற்றும் 70 வயதான தந்தை ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதன்போது காயமடைந்த சிறுவனொருவன் மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கப் சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியுள்ளதுடன், அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

கப் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வெல்லவாய பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வாய்ப்பாக நிதி நெருக்கடியை பயன்படுத்துக!

## இலங்கைக்கு ஆலோசனை கூறுகின்றது உலக வங்கி

கொழும்பு, ஏப். 06

இலங்கை தற்போதைய நிதி நெருக்கடியை ஒரு வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்த முடியும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடி பணப் புழக்கத்தால் ஏற்பட்டுள்ள தற்காலிக பிரச்னை அல்ல என்றும் அதனை வெளிப்புற நிதியுதவியின் மூலம் தீர்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு அதனை நிவர்த்தி செய்ய ஆழமான மற்றும் நிரந்தரமான சீர்திருத்தங்களைச் செயற்படுத்த ஒரு தனித்துவமான வாய்ப்பை இந்த கடினமான நெருக்கடி வழங்கியுள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

மேலும் இந்த பிரச்னையை அனுபவிக்கும் பிற நாடுகளும் நெருக்கடிக்கான மூல காரணங்களைத் தீர்க்காவிட்டால், அத்தகைய நெருக்கடிகள் மீண்டும் நிகழும் என்றும் உலக வங்கி கூறியுள்ளது.

இதேவேளை ஏழைகளையும் பாதிக்கப்படக்கூடிய வர்களையும் பாதுகாப்பதற்கு உயர் வருமானம் கொண்டவர்கள் அதிக சுமைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அது கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# பொதுஜன பெரமுனவின் வசமே பலமான அரசியல் கட்டமைப்பு!



## நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஏப். 06

**"இலங்கையில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி வசமே பலமானதொரு அரசியல் கட்டமைப்பு உள்ளது. அதனால்தான் எமது கட்சி மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது."- என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

களவு, கொள்ளையென்றெல்லாம் ராஜபக்சக்களுக்கு எதிராக கடந்தகாலங்களில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ராஜபக்சக்களுக்கு வெளிநாடுகளில் சொத்துகள், கணக்குகள் உள்ளன என்றும் கூறப்பட்டது.ஆனால் அவை போலியானவை என்பது உறுதியாகியுள்ளது.

நல்லாட்சியின்போது விசாரணை நடத்தப்பட்டது, எனினும், வெளிநாட்டில் கணக்கு இருப்பு கண்டறியப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதேபோல ராஜபக்ஷக்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. அவர்கள் விடுதலையாகினர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறினார். நல்லாட்சியின்போது இவர்களே ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகித்தனர்.

எனவே, நாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி.

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் அவசியம். அது பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டால் முழு ஆதரவு வழங்கப்படும். அத்துடன், போலி குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற சரத்தும் அந்த சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசமே பலமான அரசியல் கட்டமைப்பு - பொறிமுறை உள்ளது. அதனால் தான் கட்சிமீது தாக்குதல் தொடுக்கப்பட்டது - என்றார். (அ)

# மாணவர்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கும் நிகழ்வு வழக்கம்பரையில்



யாழ்ப்பாணம், ஏப். 06

தொல்புரம் வழக்கம்பரை அம்மன் அறக்கட்டளையின் 4ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு வழக்கம்பரை அம்மன் ஆலய மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போது 75 பாடசாலை மாணவர்களுக்கு வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளையின் ஒரு இலட்சம் ரூபா நிதியில் இருந்து அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு தெரிவான 2 மாணவர்களுக்கு மடி கணினிகள் வழங்கப்பட்டன.

இளவாலை சர்வமத ஆன்மீக அறக்கட்டளை மூலம் திருமதி அன்னம்மா யோசப் நினைவாக கலாநிதி லெரோய், வசாவிளான் மாணம்பிராய் பிள்ளையார் அறக்கட்டளை ஊடாக எஸ்.ஈஸ்வரன் ஆகியோர் இதற்கு நிதி அனுசரணை வழங்கினர்.

சுழிபுரம் மேற்கை சேர்ந்த பயனாளி ஒருவருக்கு ரொறன்ரோவில் வதியும் அரவிந்தனின் நிதிப் பங்களிப்பில் குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் அறக்கட்டளை ஊடாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கான ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து பொருட்கள் அமெரிக்காவில் உள்ள டாக்டர் சபா குலதுங்கத்தின் நிதிப் பங்களிப்பில் வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை ஊடாக வழங்கப்பட்டது.

குழந்தைகளுக்கான பால்மா மெல்போனில் வசிக்கும் ஈஸ்வரனின் நிதிப்பங்களிப்பில் முறிகண்டி சிவயோக சுவாமிகள் அறக்கட்டளை ஊடாக வழங்கப்பட்டது.

இந்த வைபவத்தில் இளவாலை சர்வமத ஆன்மீக அறக்கட்டளையின் போசகர் வணபிதா சி.ஜி.ஜெயக்குமார் அடிகள், ஓய்வு நிலை அதிபர் சிறிகாந்தன், சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அதிபர் திருமதி.சா. சிவகுமார், தொல்புரம் விக்னேஸ்வரா பாடசாலை ஆசிரியர் திருமதி. விலாசினி, சங்கரத்தை அம்பாள் அறக்கட்டளைச் செயலாளர் திருமதி. நேசகுமாரி, சங்கானை அரசினர் வைத்தியசாலை நலம்புரிச் சங்கத் தலைவர் குணசிறி, செயலாளர் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இனி திறைசேரியால் பாதுகாக்கமுடியாது!

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் கருத்து

ஜொழும்பு, ஏப். 06

நட்டத்தை ஏற்படுத்தும் அல்லது எதிர்பார்த்த இலக்குகளை எட்டாத அரச நிறுவனங்களை இனி திறைசேரியால் பாதுகாக்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நிதியமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த 52 அரச நிறுவனங்களில் 39 நிறுவனங்கள் இலாபம் ஈட்டுகின்றன. 13 நிறுவனங்கள் நட்டம் அடைகின்றன.

நட்டத்தில் இயங்கும் 13 அரச நிறுவனங்களின் நட்டம் 1029 மில்லியன் ரூபா. இலாபம் ஈட்டும் 39 நிறுவனங்களின் இலாபம் 218 பில்லியன் ரூபா.

அரச நிறுவனங்களின் வருடாந்த இழப்பு 811 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக உள்ளது. அத்துடன், இலாபம் ஈட்டும் நிறுவனங்களால் திறைசேரிக்கு வரியாக 28 மில்லியன் ரூபாவே செலுத்தப்பட்டுள்ளது.

சந்தை ஏகபோக உரிமை அரசாங்கத்திற்கு இருந்தாலும், இந்த நிறுவனங்கள் நட்டமடைந்து வருகின்றன.

மேலும், திறைசேரியில் இருந்து பணம் ஒதுக்குவது என்பது இந்நாட்டில் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்படும் பணத்தை இந்த நிறுவனங்களின் பராமரிப்புக்காக ஒதுக்குவது என்பதை அனைத்து தரப்பினரும் புரிந்து கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# 1990 அம்புலன்ஸ் சேவைக்கு ரூ. 52 கோடி நிதியுதவி கிட்டியது!

கொழும்பு, ஏப். 06

1990 சுவசரிய அம்புலன்ஸ் சேவையை தொடர்ந்தும் நடத்துவதற்கு 52 கோடியே 50 இலட்சம் ரூபாயை பெருநிறுவனங்கள் நன்கொடையாக அளித்துள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று தெரிவித்தார். இலவச அம்புலன்ஸ் சேவையை முன் னெடுக்க நிதி இல்லாதிருந்தது.

இதையடுத்து, அந்த சேவை நிறுவனம் தனியாரிடம் நிதியுதவி கோரியது. இதையடுத்தே பெருநிறுவனங்கள் 52.5 கோடி ரூபாயை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

இந்த நிதியுதவியின் மூலம் 105 அம்புலன்ஸ்களையும் தொடர்ந்தும் இயக்க முடியும்.

தற்போதைய நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வாறான நிதியுதவி கிடைத்தமை பெரும் சாதனையாகும் என்றும் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)

# தேர்தல் குறித்த உயர்நீதிமன்ற உத்தரவால் பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்படவில்லை

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்படவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

உயர் நீதிமன்றம், ஒரு சுதந்திரமான அமைப்பாக இருப்பதால், வேறு எந்த நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ நீதித்துறை உத்தரவுகளை விளக்குமாறு அழைக்கக்கூடாது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தை மதித்து நடப்பது அனைத்து அரசாங்க மற்றும் பிற நிறுவனங்களின் கடமை என்றும், நீதித்துறை செயல்பாட்டில் தலையிடுவது ஆபத்தான முன்னுதாரணத்தை அமைக்கிறது, இது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டும் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 3 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர் குழாம் பிறப்பித்த இடைக்கால உத்தரவின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த, கடந்த மார்ச் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் மனுவை கடந்த மார்ச் 3 ஆம் திகதி பரிசீலித்த உயர்நீதிமன்றம், 2023 பாதீட்டுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுத்து, நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபருக்கு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

இந்த இடைக்கால உத்தரவு பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை தெளிவாக மீறுவதை அவதானிக்க முடிவதாக பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்த கூறினார்.

இந்த நிலையில், குறித்த, இடைக்கால உத்தரவை பிறப்பித்த நீதியரசர்களை, பாராளுமன்றின் சிறப்புரிமைக்குழு முன் விசாரணைக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது. (அ)

# புதிய எல்லை நிர்ணயம் ஊடாக இனங்களிடையே பிரச்னை எழலாம்!

## மரிக்கார் எம். பி. சுட்டிக்காட்டு

இனங்களுக்கு இடையே பிரச்னைகள் புதிய எல்லை நிர்ணயம் ஊடாக மேலும் அதி கரிக்க வாய்ப்புகள் உள்ளன என்று சுட்டிக்காட் டிய எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ். எம். மரிக்கார், இவ்வாறான பிரச்னைகள் ஏற்படுவதற்கு முன்னர், அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய மீளாய்வு குழுவை அமைத்து தவறு களை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உள்ளூராட்சி எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து தெரிவித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அறிக்கையை பார்க்கும் போது இதன் மூலம் வரலாற்று தவறொன்று நடக்கவுள்ளது. இதனூடாக இனம், மதங்களுக்கு இடையே பிரச்னை ஏற்படும் வகையிலேயே காணப் படுகின்றது. அதற்கு முன்னர் மீளாய்வு குழுவை அமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.